கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

# ஞான ஒளி

ඥාන ඕලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05

பரிசுத்த திருத்தந்தையின் இலங்கைக்கான விஜயம்

"அன்பில் நிலைத்திருங்கள்"

Facebook account
www.facebook.com / popevisitsrilanka2015

கிறிஸ்தவர் இயல்பிலேயே கருணையுள்ளவர். இதுவே நற்செய்தியின் உயிர்த்துடிப்பு

POPE FRANCIS Sr Lanka 2015

திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி



பக்கம் 03
அனைத்து புனிதர்களின் தினம்

பக்கம் 06

இறந்த ஆன்மாக்களின்...


பக்கம் 12
சாவு வந்தே தீரும் இது உண்மை!

(02.11.2014 - 02 கார்த்திகை, 2014 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 05, கதிர் - 98 16 பக்கங்கள் ரூபா: 25.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD / 37 / NEWS / 2014

# குடும்பத்தில் புனித வாழ்வு வாழ்வதற்கான அழைப்பு

## கொழும்பு உயர்மறைமாவட்ட குருகுல ஒன்றுகூடல் (27-28 - 2014)

**குடும்பம் மற்றும் அர்ப்பண ஆண்டு பற்றி பலவிதமாக கலந்துரையாடப்பட்டது. உலகத் திருச்சபையில் கார்த்திகை 30ம் திகதியிலிருந்து 2016ம் ஆண்டு மாசி 2ம் திகதி வரையிலான காலப்பகுதியை அர்ப்பண வாழ்விற்கான ஆண்டு என்று திருத்தந்தை பிரான்சிஸ் பாப்பரசர் அவர்கள் பிரகடனப்படுத்துவதை முன்னிட்டு, எமது மறைமாவட்டத்திலும் அர்ப்பண வாழ்விற்கான ஆண்டு, குடும்பத்தில் புனித வாழ்வு வாழ்வதற்கான அழைப்பிற்கு பதிலளித்தல் 'அவர்கள் வாழ்வைப் பெறும் பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டும் வந்துள்ளேன்' (யோவா 10:10) எனும் தலைப்பில் பிரகடனப்படுத்தி வீட்டுத் திருச்சபையான குடும்பத்தை எவ்வாறு பாதுகாப்பது என்றும் மேய்ப்புப்பணி திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.**

- ✠ மரியாயின் ஆண்டில் தேவதாயார் பற்றிய அறிவும், உண்மையான பக்தியினதும் வளர்ச்சி
- ✠ குடும்பங்களில் குடும்ப செபமாலை அருகி வருவதால் ஏற்படும் பிளவுகளும், பிரச்சினைகளும்.
- ✠ இளமையில் செப வாழ்வு இல்லாத இளைஞர் யுவதியர் திருமணம் முடித்த பின்பு எதிர்நோக்கும் சவால்கள் (விவாகரத்து, புரிந்துணர்வின்மை)
- ✠ திருத்தந்தையின் இலங்கைக்கான வருகை (தை 13-12, 2015)
- ✠ 14ம் திகதி திருப்பலியின் போது புனித யோசேவ்வாஸ் அடிகளார் எமது நாட்டின் அப்போஸ்தலர் என்று அறிவிக்கப்படுகின்றார். அன்று காலி முகத்திடலில் இடம்பெறும் திருப்பலியில் பங்குபெற உங்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.
- ✠ திருவழிப்பாட்டின் உன்னத விண்ணகத் தன்மையை பேணி பாதுகாப்போம். "எனக்கு வழிபாடு செய்யும்படி என் மக்களைப் போகவிடு" (வி.ப 7:16) வழிபடும் மக்களாவோம் நாம்.




- ✠ குடும்பம் மற்றும் அர்ப்பண ஆண்டு 30.11.2014இல் இருந்து 02.02.2016 வரை
- ✠ குடும்பங்களைப் பாதுகாப்போம். திருமண தம்பதியரை பயிற்றுவிப்போம், பாடசாலை, மறைப்பாடசாலைகளில் கல்விகற்கும், பருவமடைந்த மாணவர்களிடையே திருமண அருட்சாதனத்தைப் பற்றிய தெளிவை ஏற்படுத்துவோம்.
- ✠ கலப்புத் திருமணங்கள் அருட்சாதன கொண்டாட்டம் ஆகாது என்பதை அறிந்து கொள்வோம்.
- ✠ குடும்பங்களுக்காக ஆற்றுப்படுத்தல் சேவையின் அவசியம்.
- ✠ மதுவினாலும், போதைப்பொருள் பாவனையாலும் சீரழியும் குடும்பங்களை மீட்டெடுத்தல்.
- ✠ இலங்கையிலிருந்து ஒலிபரப்பப்படும் கத்தோலிக்க தொலைக்காட்சியான "வேர்வம்" (Verbum) வெகுவிரைவில் ஆரம்பமாகும்.
- ✠ அர்ப்பண ஆண்டில் அருட்சகோதரிகளும், குடும்பங்களை தரிசிப்பதற்கான முன்னேற்பாடு.

## சகல ஆன்மாக்கள் தின திருப்பலி

கார்த்திகை மாதம் 2ம் திகதி சகல ஆன்மாக்கள் தினமாகும். அன்றைய தினம் மாதம்பிட்டி கத்தோலிக்க சேமக்காலையில் மரித்த சகல ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்காக திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகின்றது. அன்றைய தினம் மாலை 3.30 மணிக்கு மும்மொழியிலான செபமாலை தியானமும், அதனைத் தொடர்ந்து மாலை 4.00 மணிக்கு கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்களின் தலைமையில் கூட்டுத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும். பொரளை சேமக்காலையில் துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையின் தலைமையில் மாலை 4.00 மணிக்கு மும்மொழியிலான செபமாலை தியானமும் 4.30 மணிக்கு திருப்பலியும் நடைபெறும்

**அருட்தந்தை. விக்டர் சில்வா**

## குருப்பட்டத்திற்காக அல்ல, குருத்துவ வாழ்வை வாழ்வதற்காகவே அழைக்கப்பட்டுள்ளீர்கள்



கடந்த மாதம் 19ம் திகதி சனிக்கிழமை கண்டி, அம்பிட்டிய தேசிய குருமடத்தில் 26 அருட்சகோதரர்கள் திருத்தொண்டர்களாக பதுளை ஆயர் மேதகு வின்சன்ட் பர்னாந்து (SSS) ஆண்டகையினால் அருட்பொழிவு பண்ணப்பட்டார்கள். அன்றைய திருப்பலி மறையுரையில் ஆயர் அவர்கள் குருப்பட்டத்திற்காக அல்ல, குருத்துவ வாழ்வை வாழ்வதற்காகவே உங்களை தயார்படுத்துங்கள் என்று அருட்சகோதரர்களுக்கு அறிவுரை வழங்கினார். திருத்தொண்டர் நிலை என்பது, திருநிலைகளில் 3வது நிலையும், குருத்துவ அபிஷேகத்துக்கான ஆயத்த நிலையுமாகும் எனபது குறிப்பிடத்தக்கது. அன்றைய நிகழ்வினைப் படத்தில் காணலாம்.

## முத்திரை வெளியீடு



பரிசுத்த திருத்தந்தையின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு ஞாபகார்த்த முத்திரையொன்றை வெளியிட அரசாங்கம் தீர்மானித்துள்ளது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எதிர்வரும் தை மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இதனை முன்னிட்டு அவரை கௌரவிக்கும்...

தொடர்ச்சி 15ம் பக்கம் ➡



## திருத்தந்தை ஆறாம் பவுல் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

ஐப்பசி மாதம் 19ந் திகதி காலை 10.30 மணிக்கு வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நிகழ்த்திய திருப்பலியில் இறையடியார் திருத்தந்தை 6ம் பவுல் அவர்கள் அருளாளராக அறிவிக்கப்பட்டார். இத்திருப்பலியில் முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களும் கலந்துகொண்டார். திருப்பலியில் மறையுரையாற்றிய திருத்தந்தை அவர்கள், புதியவை கண்டு இறைவன் அஞ்சுவதில்லை என்பதாலேயே நமக்கும் எதிர்பாராத வழிகளைத் திறந்து நம்மை வழிநடத்துகின்றார் என்றார். மேலும் திருத்தந்தை 6ம் பவுல் அவர்கள் காலத்தின் அறிகுறிகளை உணர்ந்து நம் வழிகளை மாற்றிக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதையும் சுட்டிக்காட்டினார்....

தொடர்ச்சி 15ம் பக்கம் ➡

Please Like pope visit sri lanka official facebook page.
www.facebook.com/popevisitsrilanka2015 ■ www.popefrancissrilanka.com
POPE FRANCIS Sri Lanka 2015

"என் நெஞ்சம் அமைதிபெற உம் திருமுன் வைத்துக் காத்தருளும்." (தி.பா 131)

## மறையாசிரியர் தேர்வுகள்

தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தினால் வருடந்தோறும் நடாத்தப்படும் மறையாசிரியர் பரீட்சை, மறையாசிரியர் சிறப்புப்பரீட்சை, மறையாசிரியர் கௌரவப் பட்டப்பரீட்சை ஆகிய தேர்வுகள் எதிர்வரும் கார்த்திகை 15ம் திகதி (15.11.2014) நடைபெற உள்ளது. இலங்கையின் 12 மறைமாவட்டங்களிலுமுள்ள 45 பரீட்சை நிலையங்களில் மேற்படித் தேர்வுகள் இடம்பெற உள்ளன. மறையாசிரியர் சிறப்பு, கௌரவ தேர்வுகளில் தமிழ் பிரிவில் முறையே 630, 425, 210 மறையாசிரியர்களும், சிங்கள பிரிவில் முறையே 1100, 825, 480 மறையாசிரியர்களுமாக மொத்தம் 3730 மறையாசிரியர்கள் இத்தேர்வுகளுக்குத் தோற்ற உள்ளனர். பரீட்சைக்குத் தோற்றவுள்ள மறையாசிரியர்கள் குறித்த நேரத்திற்கு குறைந்தது 10 நிமிடங்களுக்கு முன்பாகவே வரவேண்டும் தத்தம் பரீட்சை நிலையங்களுக்கு வந்து தமக்குரிய இடத்தில் வந்து அமருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பரீட்சை மண்டபத்திற்கான அனுமதிப்பத்திரத்தையும் மறக்காமல் கொண்டு வரவும்.

**அருட்சகோதரி. ரஞ்சி போல்துரை**
**தமிழ்ப்பிரிவு பொறுப்பாளர்**
**தேசிய மறைக்கல்வி நடுநிலையம்.**

## தேசிய மறைக்கல்வி தினம்



28.09.2014 அன்று தேசிய மறைக்கல்வி தினத்தை முன்னிட்டு பதுளை புனித மரியாள் பேராலயத்தில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. மறைக்கல்வி மாணவர்களை மலர்கள் என்று கூறினால் அது மிகையாகாது. பாலரை என்னிடத்தில் வரவிடுங்கள் என்று கூறிய இயேசுவின் பொன்மொழியை பின்பற்றி சிறுவர்களை நல்வழிப்படுத்தி விசுவாசத்தில் கட்டியெழுப்ப மறையாசிரியர்கள் அழைக்கப்படுகிறார்கள். அந் வகையில் அன்றைய திருப்பலியை மலர்களான மறைக்கல்வி மாணவர்கள் ஒவ்வொரு பூக்களை தம் கைகளில் ஏந்திய வண்ணம் பவனியாக வந்து அவற்றை பூச்சாடியில் இட்டு அதை திருப்பலி பீடத்தில் ஒப்படைத்தார்கள். பீடப்பணியாளர்கள் முன்செல்ல அதனைத் தொடர்ந்து மறைக்கல்வி மாணவர்களும், மறையாசிரியர்களும் பவனியாகச் சென்று திருப்பலியை சிறப்பாக நடாத்த உதவினார்கள். பங்கின் உதவிப்-பங்குத்தந்தை ஞானராஜ் குரூஸ் அடிகளார் திருப்-பலியினை ஒப்புக்கொடுத்தார். இறுதியாக மறையா-சிரியர்களும், அருட்சகோதரிகளும் கையில் விளக்கேந்தி தமது வாக்குறுதியை புதிப்பித்ததோடு இறையாசீரையும் பெற்றுக் கொண்டனர்.

**தகவல் : திருமதி. அன்னம்மா சகாயம். மறையாசிரியர், பதுளை**

## நீத்தார் நினைவுத் திருப்பலி

**08.11.2014**



அகில இலங்கை பரத சங்க ஏற்பாட்டில் வருடா வருடம் இடம்பெறும் இரங்கற் திருப்பலி இவ்வாண்டும் சங்கத்தின் மறைந்த ஸ்தாபகர்கள், தர்மகர்த்தாக்கள், போஷகர்கள், நிர்வாகிகள், உறுப்பினர்கள், நலன் விரும்பிகள், உபகாரிகள் அனைவரையும் நன்றியுணர்வோடு நினைவு கூர்ந்து இம்மாதம் 8ந் திகதி சனிக்கிழமை மாலை 7.00 மணிக்கு புனித லூசியாள் பேராலயத்தில் அருட்தந்தை. அந்திரியாஸ் பெர்ணான்டோ (அ.ம.தி) அடிகளாரால் ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியில் அனைவரும் கலந்து கொண்டு இவ்வான்மாக்களின் நித்திய இளைப்பாற்றிக்காக மன்றாடுமாறு பணிவோடு அழைக்கின்றோம்.

**நன்றி**

**தகவல் : எமிலியான்ஸ் பெர்னாண்டோ**

## இரத்தினபுரி புனித அந்தோனியாரின் 50வது வருட பொன்விழாக் கொண்டாட்டம்.



இரத்தினபுரி மறைமாவட்டத்தைச் சேர்ந்த தொலஸ்வல பங்கிற்குச் சொந்தமான ஹப்புருகல இறப்பர் தோட்ட மலைக்குன்றிலே வீற்றிருக்கும் புனித அந்தோனியாரின் 50வது வருட பொன் விழாவையொட்டி கடந்த 2014.10.03 அன்று பங்குத்தந்தை அருட்தந்தை. ஜோர்ஜ் தோக்ஸ் (இ.ச) அடிகளாரின் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து நவநாட் திருப்பலிகளை அருட்தந்தை ரிச்சட் (இ.ச) அடிகளார் நிறைவேற்றினார். மறையுரைகளும் நிகழ்த்தப்பட்டது. 2014.10.11 மாலை 6.00 மணியளவில் ஆராதனை இயேசு சபையின் மானில மேலாளர் அருட்தந்தை பிரான்சிஸ் ஜெயராஜ் இராசையா அடிகளாரின் தலைமையில் இடம்பெற்றது. சுமார் பதின்மூன்று பங்குகளிலிருந்து அருட்தந்தையர்களும், கன்னியர்களும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து பொன்விழாக் கொண்டாட்ட திருப்பலியை இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் மேதகு கிளிட்டஸ் சந்திரசிறி பெரேரா O.B.S ஆண்டகை அவர்களும், பங்குத்தந்தை அருட்தந்தை ஜோர்ஜ் தோக்ஸ் (இ.ச) அடிகளாரும் இணைந்து ஒப்புக்-கொடுத்தனர். இத்திருப்பலியில் கலந்துகொண்ட ஆயர் மற்றும் அருட்தந்தையர்களை படத்தில் காணலாம்.

**தகவல் : மேரி இருதயநாதன் மறையாசிரியர்.**
**புனித இராயப்பர் – சின்னப்பர் பேராலயம், இரத்தினபுரி**



காலி உடுகம்பொல பங்கின் கல்கஸ்வெல அன்னை திரேசா ஆலய திருவிழா 28.09.2014 அன்று கொண்டாடப்பட்டது. அன்றைய நாளில் திரு. சாள்ஸ் தங்கவேலு என்பவரால் தன் தந்தையின் நினைவாக மணிகோபுரம் கையளிக்கப்பட்டது. அதை அருட்தந்தை மைக்கல் ராஜேந்திரம் அடிகள் ஆசீர்வதிப்பதையும், பங்குத்தந்தையும், பங்கு மக்களையும் படத்தில் காணலாம். **தகவல் : அருட்தந்தை. கிறேஷன்**

## கொழும்பு உயர் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க மறைக்கல்வி நடுநிலைய அறிவித்தல்கள்

### கொழும்பு உயர் மறைமாவட்ட மறைக்கல்விப் பரீட்சை – 2014

கொழும்பு உயர் மறைமாவட்ட மறைக்கல்வி அப்போஸ்தலிக்கப் பணியகத்தினால் வருடந்தோறும் நடாத்தப்பட்டுவரும் மறைக்கல்வி பரீட்சையானது இவ்வருடம் கார்த்திகை மாதம் 1ம் திகதி காலை 9.00 மணிக்கு பங்கு மறைப்பாடசாலைகளில் நடைபெறும். பங்குத்தந்தையர்களும், பொறுப்பு ஆசிரியர்களும், பெற்றோர்களும் இதனைக் கவனத்திற் கொண்டு பிள்ளைகளை குறித்த நாளில் குறித்த நேரத்திற்கு முன்பதாக அனுப்பி பரீட்சைக்கு சமூகமளிக்கச் செய்யவும்.

### தேசிய மறைப்பணியாளர் பரீட்சை – 2014

தேசிய மறைப்பணியாளர் பரீட்சையானது கார்த்திகை மாதம் 15ம் திகதி நடைபெறவுள்ளது. முதல் பிரிவு காலை 9.00 மணி தொடக்கம் பகல் 12.00 மணிவரையும், இரண்டாவது பிரிவு பகல் 1.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரையும் நடைபெறும். பரீட்சைக்கு தோற்றவிருப்பவர்கள் அனுமதிப்ப-த்திரத்துடன் தேசிய அடையாள அட்டையையும் எடுத்து வர வேண்டும். காலை 8.30 மணிக்கு பரீட்சை நிலையத்திற்கு சமூகமளித்து சிரமங்களை தவிர்த்துக் கொள்வது வரவேற்கத்தக்கது. இவ்வருடம் கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் சாதாரண தேர்வுக்கு 81 மறைப்பணியாளர்களும், சிறப்புத் தேர்வுக்கு 39 மறைப்பணியாளர்களும், கௌரவத் தேர்வுக்கு 13 மறைப்பணியாளர்களும் தோற்றவிருக்கின்றார்கள். பரீட்சை நிலைய விபரங்கள் பின்வருமாறு அமைக்க-ப்பட்டுள்ளது. கீழ்வரும் வட்டாரங்களுக்கான பரீட்சை நிலையங்கள்.

**புனித சூசையப்பர் கல்லூரி, டாலி வீதி, கொழும்பு 10.**
வடகொழும்பு, மத்திய கொழும்பு, தென் கொழும்பு, கோட்டே, வத்தளை

**தூய லோயலா கல்லூரி, தழுவகொட்டுவ**
கட்டாண, நீர்கொழும்பு

***கொழும்பு மறைக்கல்வி நடுநிலையம்.***

அன்பு வாசகர்களே! எமது பத்திரிகைக்கு உங்கள் ஆக்கங்களை மின்னஞ்சல் மூலமும் அனுப்பிவைக்கலாம்.

**எமது மின்னஞ்சல் முகவரி**
cgnanaoli@yahoo.com

## பாத்திமா அன்னை ஆலயத் திருவிழா – மருதானை





மருதானை பாத்திமா அன்னை ஆலயத்தின் வருடாந்த திருவிழா 19.09.2014 ஞாயிற்றுக்கிழமை அன்று கொண்டாடப்பட்டது. திருநாள் சிறப்புத் திருப்பலியை அருட்தந்தை எட்மன்ட் முருகுப்பிள்ளை அடிகளார் ஒப்புக்கொடுப்பதையும், திருப்பலியில் பங்குபற்றிய மக்களையும் படத்தில் காணலாம்.

**தகவல் : டிக்சன் பர்னாந்து**



வத்தளை றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலய மாணவர்கள் 19.10.2014 அன்று முதல் தடவையாக திவ்விய நற்கருணை அருட்சாதனத்தை பெற்றுக்கொண்டார்கள். பெற்றுக்கொண்ட மாணவர்களையும் பயிற்றுவித்த ஆசிரியர்களையும், அருட்தந்தையர்களையும் படத்தில் காணலாம். **தகவல் : அருட்தந்தை. உதயதாஸ்**

ஞான ஒளி
GNANA OLI

கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல 0112695984,0114899611 பெக்ஸ் 0112692586,
மின்னஞ்சல் முகவரி cgnanaoli@yahoo.com
02 கார்த்திகை மாதம், 2014 ஞாயிற்றுக்கிழமை.

## ‘மரணத்தை மறக்காதே ஏனெனில் மரணம் உன்னை மறப்பதில்லை’

இம்மாதம் சகல புனிதர்களையும், மரித்த ஆன்மாக்களையும் பரிசுத்த திருச்சபையானது நினைவுகூர்ந்து நிற்கின்றது. இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவரும் ஒருநாள் மரணித்தே ஆகவேண்டும். அது நிச்சயம். அந்தநாளும் குறிக்கப்பட்டுவிட்டது. ஆனால் அந்நாளை நாம் அறியோம். அதனை இன்று மரித்த ஆன்மாக்களின் திருநாள் ஞாபகப்படுத்தி நிற்கின்றது. நாம் விரும்பியோ விரும்பாமலோ பிறந்துவிட்டோம். வாழ்ந்துதானே ஆகவேண்டும். வாழ்க்கை ஒருமுறைதான் என்று சிலர் பொருளோடு வாழ்கின்றனர். நாம் ஏன் வாழ்கின்றோம் என்று பொருள் தெரியாமலே பலர் வாழ்கின்றனர். மானிட வாழ்வின் நிலையற்ற தன்மையைத்தான் நாம் திருப்பலி முடிவில் நினைவுகூர்கின்றோம். தூசிக்கும் சாம்பலுக்கும் சமமான மனிதன் கர்வம் கொள்ள என்ன இருக்கிறது. இன்று அரசனாக இருப்பவனுடைய உடல் நாளை ஜடமாக மாறிவிடுகிறது. புழு பூச்சிகளுக்கு அவன் உடல் சொந்தமாகிவிடுகின்றது.

ஆயர் ஒருவர் பல்லாண்டுகள் மறைப்பணியாற்றிய பின்பு நோய்வாய்ப்பட்டு மரணப்படுக்கையில் இருந்தார். அப்போது அவரைக் காண்பதற்கு உறவினர், நண்பர், உடன் ஊழியர் என பலர் அவரைச் சந்திக்க ஆசைப்பட்டனர். அவர்கள் எவரையும் தாம் காணவிரும்பவில்லை என ஆயர் அவர்கள் கூறிவிட்டார். ஆனால் இறைவனே இல்லை, மறுவாழ்வே இல்லை, விண்ணகமே என்று ஒன்றில்லை என்று கூறிய நாத்திகர் ஒருவர் மட்டும் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டார். நாத்திகருக்கு இதுபெரும் வியப்பாக இருந்தது. அவர் உள்ளே சென்றதும் ஆயரிடம் ஏன் என்னை மட்டும் உள்ளே அனுமதித்தீர்கள் என்று கேட்டார். அதற்கு ஆயர் என் உறவினர், நண்பர், என் உடன் ஊழியர் இவர்களை நான் விண்ணகத்தில் காண்பேன். விண்ணகம் என்று ஒன்றுமில்லை என்று கூறும் உன்னை அங்கே சந்திக்க முடியாது என்பதால் உன்னை கடைசி முறையாக காண்பதற்கு ஆசைப்பட்டேன். அதுதான் காரணம் எனக் கூறினார். எமது இறுதித் தீர்வின்போது இறைவன் தமது அரியணையில் வீற்றிருக்க இறையாட்சியை உரிமையாக்கிக் கொண்டோர் அவரது வலப்பக்கத்தில் அமர்ந்துகொள்வர். **"தீயவர்கள் முடிவில்லா தண்டனை அடையவும் நேர்மையாளர்கள் நிலையான வாழ்வு பெறவும் செல்வார்கள்"** என்பது இயேசுவின் போதனையாகும்.

இயேசு கூறும் இறையரசு அன்பினால் ஆளப்பட வேண்டும். இவ்வரசை உரிமையாக்கிக் கொள்வோர் அனைவரும் சகோதரர்களும் நண்பர்களுமே. இவ்வுலகில் நாம் பிறந்தபோது எவற்றைக் கொண்டு வந்தோம் நம்முடன் எடுத்துச் செல்வதற்கு? வெறுமையாக வந்தோம் வெறுமையாகவே போகப்போகின்றோம். உயிர் என்பது கடவுள் தந்த கொடை. அதுவும் அவர் சாயலில் கொடுக்கப்பட்டது. எனவே நாம் இவ்வுலகில் வாழும்வரையில் அனைத்து மனிதர்களையும் உண்மையாக அன்புசெய்து அவர்களை மதித்து இறையரசை உரிமையாக்கிக் கொள்வோம். ஏனெனில் இவ்வுலக வாழ்வோடு நமது வாழ்க்கைப் பயணம் முடிந்து விடுவதில்லை. மாறாக மரணத்திற்குப் பின்பும் நமக்கோர் வாழ்வுண்டு. அதனைத்தான் முடிவில்லா வாழ்வு நித்திய வாழ்வு என்று கூறுகின்றோம். எனவே இன்றைய நாளில் எமது மரணத்தையும் நினைவுப்படுத்துவோம். நாமும் ஓர் நாள் இறக்கப்போவது உறுதி. ஆனால் அத்தருணம் எமக்கு ஒரு மனநிறைவை தரும் தருணமாக நாம் நன்றாகவே வாழ்ந்தோம் என்ற திருப்தியை தரும் தருணமாக அமைய வேண்டும். அப்போதுதான் நமக்கும் இறையரசில் உரிமைப்பேறு கிடைக்கும்.

ஆன்மாக்களுக்காக மன்றாட திருச்சபை எமக்குத் தந்த விசேட காலம் இதுவாகும். என்றாலும் எமது ஆன்மாவையும் காத்துக்கொள்ள முயற்சி செய்வோம். உலகம் முழுவதையும் தனதாக்கிக் கொண்டாலும் ஆன்மாவைக் காத்துக் கொள்ளவில்லை என்றால் பயனொன்றுமில்லை என்பதை எப்போதும் எம் உள்ளத்தில் இருத்திக்கொள்வோம்.

**இறையாசீருடன்**
**ஆசிரியர்**

# அனைத்து புனிதர்கள் தினம்




நம் தாய் திருச்சபை கார்த்திகை முதல் நாளை அனைத்துப் புனிதர்களின் நினைவு நாளாகவும், கார்த்திகை 2ஆம் திகதி சகல ஆன்மாக்களின் நாளாகவும் நினைவுகூறுகின்றது. பங்குகளிலும், வீடுகளிலும் இந்நாட்கள் வெகு சிறப்பாக கொண்டாடப்படுவது பரம்பரையாய் உள்ளது. நம்மை விட்டு இறந்தோர் சிலர் ஆற்றிய அரும் பணிகளை நம்மால் மறக்க முடியாது. மேலும் அவர்களிடம் மன்றாடும்போது அவர்கள் ஆற்றும் புதுமைகள் நம்மை வியக்க வைக்கின்றன. இத்தகையோரின் செயற்பாடுகளை திருச்சபை ஆய்ந்தறிந்து இவர்களில் சிலரை வணக்கத்துக்குரியவர்கள் என்றும், மேலும் சிலரை புனிதர்கள் என்றும் திருச்சபை உயர்த்தியுள்ளது.

அவ்வாறாக கார்த்திகை முதலாம் திகதி அனைத்து புனிதர்களின் விழாவாக எடுக்கின்றது. புனிதர்கள் அனைவரும் நீதி, நேர்மை, இறைபற்று, நம்பிக்கை, மனவுறுதி, பணிவு, அன்பு ஆகியவற்றை தேடி தங்களது தூய்மையான சிறந்த வாழ்க்கையினால் இந்த உன்னதமான அனைவரும் போற்றுவதற்கமைய அதி உன்னத நிலையை அடைந்தவர்கள். மனிதர்கள் அவைரும் பிறக்கும்பொழுது புனிதர்களாகத்தான் பிறக்கின்றார்கள். ஆனால் இவ்வுலக ஆசைகளினால் கவரப்பட்டு இறைவனுக்கு வேண்டாத விதமாக வாழ்க்கை வாழ்ந்து அதி மேன்மையான, அதி சிறந்த கடவுளுக்கு மிகவும் பிரியமான புனிதத்தன்மையை இழக்கின்றார்கள்.

இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் அனைத்துத்திலும் ஒரு சில வார்த்தைகளை மட்டும் பின்பற்றினாலே நாம் புனிதர்களாக முடியும். அதுதான் “உன்னை நீ அன்பு செய்வதுபோல உன் அயலானையும் அன்பு செய் என்பதாகும். அன்பும் நட்பும் எங்குள்ளதோ அங்கே இறைவன் இருக்கிறார். நாம் நமது பிதாவுடனும் நம் மத்தியில் உள்ள மக்களுடனும் அன்பாகவும், தூய்மையான நட்புடனும் இருந்தாலே நாமும் புனிதர் ஆகலாம். அன்பு பற்றி இவ்வாறு பெரியார் கூறுகின்றார்.

**வெள்ளை நிற மல்லிகையுமல்ல**
**வேறெந்த மா மலருமல்ல உத்தமனார்**
**வேண்டுவது உள்ளக் கமலமடி**

இங்கே அவர் உத்தமனார் என்று குறிப்பிட்டிருப்பது உள்ளத்தின் தூய்மையான அன்பு. நமது வாழ்க்கை நமக்கு மாத்திரம் பயன்படாமல் நமக்கும் பிறருக்கும் பயன்படக்கூடியதாக வாழவேண்டும். அப்படி வாழ்ந்தால் நாமும் புனிதர்களாகலாம். புனிதர்கள் அனைவரும் எங்களைப் போல் இவ்வுலகில் பிறந்து இறை அன்புடனும், பிறர் அன்புடனும் வாழ்ந்து இறைவனுக்கு உகந்தவர்களாக நடந்து இவ்வுன்னத நிலையை அடைந்தவர்கள். எனது சிறிய அறிவுக்கு எட்டிய அளவில் வாழ்வதற்கான இரண்டு முறைகள் உண்டு. ஒன்று இப்படித்தான் வாழ வேண்டும். மற்றொன்று எப்படியும் வாழலாம். இதில் முதலாவது ரகத்தை தேர்ந்தெடுத்து வாழ்ந்தவர்கள்தான் நமது புனிதர்கள். நாமும் இந்த முதலாவது ரகத்தை கடைப்பிடித்து ஒழுகினால் புனிதர் ஆகலாம்.

**ஆக்கம் : T.A. மரியதாசன், மொரட்டுவ**

# அனைத்து புனிதர்களிடமும் மன்றாடுவோம்

- ✠ இயேசுவின் சீடராகி திருச்சபையை வளர்த்த அப்போஸ்தலர்களே!
- ✠ விசுவாச ஒளி காத்து வேள்வித் தீயில் மூழ்கிய மறைசாட்சியரே!
- ✠ நற்செய்தி தூதராய் உலகெங்கும் பணிபுரிந்த மேய்ப்பர்களே, குருக்களே!
- ✠ கன்னிமை காத்து இன்னுயிரை ஈந்த கன்னியரே, துறவியரே!
- ✠ திருமுழுக்கின் வழியலே நல்வாழ்வு வாழ்ந்த இல்லறத்தாரே, இளவல்களே!
- ✠ அவனியில் ஆண்டவருக்கென்று வாழ்ந்த அனைத்துப் புனிதர் புனிதைகளே, அன்னை மரியோடு இணைந்து ஆண்டவரை வாழ்த்துங்களே!
- ✠ உம்வழியில் நாங்களும் வாழ்ந்திட எமக்காய் என்றும் இறைவனிடம் பரிந்து பேசுவீரே!

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



நற்பேற்று வாழ்வு கிறிஸ்தவ விசுவாச வாழ்வாகும். நற்பேற்று வாழ்வு என்பது நீதியுடைமை வாழ்வு என்றும், பெயருக்குத் தகுதியான வாழ்வைக் கொண்டிருப்பது என்றும் திருவிவிலியத்தில் சுருக்கமாக காண்கிறோம். இங்கு திருவிவிலியத்தின் ஒளியில், நற்பேற்று வாழ்வின் சிறப்பியல்புகள் புனித வாழ்வுக்கு அடிதளமாகின்றன என்ற சிந்தனை வளர்கின்றது.

### பழைய ஏற்பாட்டில் நற்பேற்று வாழ்வு

திருவிவிலியத்தில் எல்லாவற்றுக்கும் மேலாக தன்னுடைய தன்னிகரற்ற மகிமையை மானிடருடன் பகிர விரும்பும் இறைவனாக யாவேயைக் காண்கிறோம். மானிடரின் அநீத வாழ்வைக் கண்டுகொள்ளாத கிரேக்க கடவுளரைப் போலன்றி, மானிடரின் வாழ்வில் ஈடுபாடுகொண்டு, அவர்கள் வாழ்வின் தூய்மை, விடுதலைக்காக தம்மை அவர்களுடன் அடையாளப்படுத்திக் கொண்ட இறைவனாக யாவேயைக் காண்கிறோம். இந்த இறைவனுடைய ணமாகின்றது. இயேசுவின் இறையரசு பற்றிய நம்பிக்கையும், படிப்பினையும், அர்ப்பணமும், இறையரசு வாழ்வு என்ன என்பதை உள்ளங்கை நெல்லிக்கனியாகக் காட்டுகின்றன. இயேசுவின் படிப்பினையில், நற்பேற்று வாழ்வுக்கு ஒருவர் "அனைத்துக்கும் மேலாக இறையாட்சியையும், இறைவனுக்கு ஏற்புடையதையும் மட்டுமே நாடி வாழவேண்டும்" (மத். 6: 31). இயேசுவுக்கு இறையாட்சி வாழ்வு என்பது அவர் இவ்வுலகில் மூட்டிவிட்ட தீ ஆகும் (லூக். 12: 49). ஆக, நற்பேற்று வாழ்வு "காலத்தின் குறிகளை அறிந்து, இறையாட்சிக்கு ஏற்புடைய முடிவுகளைச் செய்து வாழ்வதாகும்" (லூக். 12: 56-58).

இயேசுவின் நற்பேற்று வாழ்வுபற்றிய படிப்பினையில் பரிவும் வாழ்வும் தந்தையாம் இறைவனில் ஒப்புரவாக்கப்பட்டுள்ளன. வானகத்தந்தை பரிவுள்ளவராக இருப்பது போல, விசுவாசிகளும் இருப்பதே நிறைவாழ்வாகும்; நற்பேற்றுடைய வாழ்வாகும். "இதயத்தில்



# இறைவழி செல்வோர் பேறுபெற்றோர்

✍ : அருட்தந்தை. ஜெராட் டீ ரொசய்ரோ, அ. ம. தி.

அருளினின்று அள்ளிப் பருகி வாழும் வாழ்வு நற்பேற்று வாழ்வாகும். "புறமே தெரிந்தென்னை பொற்கழல் சூடி, அகமே புகுந்தெனக்கு ஆரமுதூட்டியவன், ஊட்டுபவன்" அவ்விறைவனாவான்.

ஆக, அவ்விறைவனை விசுவசிப்பவர்கள் "இறைவழி நடப்பது" அவர்களது இயல்பு வாழ்வாகும் (திபா. 1: 1..). அதுவே அவர்களைப் பேறுடையவர்களாக்குகின்றது. அவர்கள் ஆண்டவரை நம்பி வாழ்வதும் (திபா. 84: 12; 146: 5), இறை அச்சத்துடன் அவரது நியதிகளை வாழ்வதும் (திபா. 119: 1; 103: 11), இறை ஞானத்தைத் தேடுவதும் (பழ. 8: 34-35); ஏழை, எளியோர்மேல் பரிவு கொண்டு வாழ்வதும் (திபா. 41: 2; பழ. 14: 21) இறைவழியில் நடக்கும் வழியாகும். அது மண்ணகத்தில் தடம்கொண்ட வாழ்வாகும். இறைவழியில் நடப்பவர்கள் நேர்மையுடன் வாழ்வு பெற்று, அமைதியிலும், மகிழ்ச்சியுடனும் வாழ இறைவனால் கற்பிக்கப்பட வேண்டும் (திபா. 94: 12; திபா. 144: 12-15; சீரா. 26: 1..; பழ. 3: 10). அப்போது அவர்கள் வாழ்வு நதியோர மரங்கள் போல வழமாக இருக்கும்.

நற்பேற்று வாழ்வை விண்ணகத்தை நோக்காகக் கொண்டதாகப் பார்ப்பதுண்டு. விண்ணக வாழ்வு என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தையோ, குறிப்பிட்ட காலத்தையோ குறிக்கும் வாழ்வு அல்ல. மாறாக, அது காலங்களையும், இடத்தையும் கடந்த நிலைகொண்டு, எங்கும் பிரசன்னமாகவுள்ள இறைவனின் பிரசன்னத்தில் வாழ்வதாகும். அவ்வாழ்வு இறைபிரசன்னத்தையே நாடி வாழும் முடிவில்லாத வாழ்வாகும்.

### புதிய ஏற்பாட்டில் நற்பேற்று வாழ்வு

இயேசுக் கிறிஸ்துவின் மண்ணக வாழ்வு இறை பிரசன்னத்தில் வாழும் நற்பேற்று வாழ்வுக்கு வரைவிலக்சாந்தமும், தாழ்ச்சியும் உள்ளவராக" (மத். 11: 29), தன்னையே மாற்றுவதன் மூலம் ஒருவர் பேறுகளை மனுவுருவெடுக்கச் செய்யலாம் என்பது இயேசுவின் படிப்பினையாகும். நீதி, தாழ்ச்சி, சாந்தம், தூய்மை, பரிவு மற்றும் சமாதானத்துக்கான ஆவல் இயேசுவின் இறையாட்சித் "தீயில்" வேள்வியாக வேண்டும். அதுவே நற்பேற்று வாழ்வாகும்.

புனித மத்தேயு (5:3-12) இயேசுவின் தொடக்க உரையில் கிறிஸ்தவ நற்பேற்று வாழ்வுக்கான திட்டத்தை முன்வைக்கின்றார். நற்பேறற்ற வாழ்வை புனித லூக்கா சுட்டிக்காட்டத் தவறவில்லை (லூக். 6:20-26). புதிய ஏற்பாட்டில் மேலும், விசுவசித்ததன் காரணமாக (லூக். 1: 45) மரியாள் பேறுடையவளாகின்றாள் (லூக் 1: 48; 11: 27). இறை வார்த்தையைக் கேட்டு (லூக். 11: 28) காணாமலே விசுவசிப்பவர்கள் (யோவா. 20: 29) அனைவரின் பேறுடைமையை மரியாள் அறிவிக்கின்றாள். தந்தையாம் இறைவனால் இறைமகன் பற்றிய வெளிப்பாட்டை பெற்ற சீமோன் பேறுபெற்றவர் (மத். 16: 17). எல்லாவற்றுக்கும் மேலாக, இயேசு ஆண்டவரை மீண்டும் சந்திக்க எதிர்நோக்கக் கொண்ட விசுவாசம் உள்ளவர்களாகவும், விழிப்பானவர்களாகவும் (மத். 24: 46) ஒருவருக்கொருவர் பணிவிடைபுரிந்து வாழ்பவர்கள் சீடர்கள் என்ற பேறறைப் பெறுவார்கள். மத்தேயுவின் படிப்பினையில் இறுதித் தீர்ப்பு (மத்.25) ஒருவருடைய நற்பேற்று வாழ்வுக்கான இறை எதிர்பார்ப்பை முன்வைக்கின்றது. அத்தகையவர்கள் உறுதி இழக்காதவர்கள். "ஆண்டவருக்குள் இறப்பவர்கள்" (திவெ. 14:13).

முடிவாக, கிறிஸ்தவ விசுவாசத்தின் படிப்பினையில் நற்பேற்று வாழ்வே விசுவாசிகளின் இலக்காகும். இவ்வாழ்வு ஒரு புனித பயணமாகும். இதற்கு வரைவிலக்கணமாகவும், முன்மாதிரியாகவும் திருச்சபையில் புனித நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ள புனிதர்களின் நீண்ட பட்டியல் சான்றுபகர்கின்றது. எளிமையாக இறையருளுக்கு திறந்த மனமும், விழிப்பும் கொண்டு வாழ்ந்தவர்கள் நற்பேற்றைப்பெற்ற புனிதர்களாவர். இயேசுவை பல்வழிகளில் கண்டு விசுவாசித்து சிறப்பு வழிகளில் வாழ்ந்தவர்கள் நற்பேற்றைப் பெற்ற புனிதர்களாவர். வறுமையில், துன்பத்தில், இல்லாமையில், இயலாமையில், பாவ நிலையில் என்று வாழ்வின் யதார்த்த அனுபவங்களில் துவண்டு, இறையன்பைச் சுவைத்ததன் விளைவாக தம்மை இறைவனுக்கே அர்ப்பணித்து, இயேசுவைப் பின்பற்றி வாழ்ந்தவர்கள் நற்பேற்றைப்பெற்ற புனிதர்களாவர்.

நம் மண்ணில் தம் இளமையை அர்ப்பணித்து, ஏழ்மை, வறுமை, பாதுகாப்பின்மை மத்தியில் நற்செய்திக்கு சாட்சியாக வாழ்ந்து நற்பேற்றைப் பெற்றவர் யோசப்வாஸ் முனிவராவார். அவரை திருச்சபை, கிறிஸ்தவ விசுவாச சமூகம் புனிதராக அறிக்கையிட உள்ளது. சிறப்பாக, இலங்கைக் கிறிஸ்தவ விசுவாசிகளின் சமூகம் இதனை தம் நற்பேற்று வாழ்வைப் புதுப்பிக்கும் நிகழ்வாக சந்திப்பது சிறப்பாகும். இன்றைய இலங்கையின் சமூக, கலாச்சார, சமய வாழ்வு அறம் பிழைத்த தலைமைகளால் வழிநடத்தப்படும் நிலையில் யோசப் வாஸ் முனிவரின் நற்பேற்று வாழ்வுப் படிப்பினைகள் கிறிஸ்தவ விசுவாசிகளின் சமூகத்தால் இறைமீட்கப்படத் தேவை எழுந்துள்ளது. இயேசுவின் இறையரசு விழுமியத் தீயின் ஒளியில் புனிதராக அறிக்கையிடும் நிகழ்வை எதிர்கொள்வது "இறைவழி நடப்போர் பேறுபெற்றோர்" என்ற இறை வார்த்தையை வாழ்வாக்கும்.




⁂ செபமாலை கத்தோலிக்கத்தின் பாரம்பரியச் செபம்

⁂ செபமாலை மிகவும் எளிமையான செபமாகும்

⁂ செபமாலை தனியாகவும், குடும்பமாகவும், குழுவாகவும் செபிக்கின்றோம்.

⁂ கடவுளின் வார்த்தையின் ஒரு தொகுப்புதான் செபமாலை

⁂ 59 மணியின் செபம்தான் செபமாலை

⁂ இயேசுவின் வாழ்க்கை சரித்திரத்தின் நான்கு பாகங்களே செபமாலை

⁂ இயேசு எமக்கு கற்றுத்தந்த செபம் "பரலோகத்திலிருக்கும் எங்கள் பிதாவே" இந்த செபத்தை 6 முறை செபமாலையில் செபிக்கின்றோம்

⁂ அருள் நிறை மரியே செபம் கடவுளின் வார்த்தை இதை செபமாலையில் 53 முறை செபிக்கின்றோம்

⁂ பரிசுத்த மரியே சர்வேசுரனுடைய மாதாவே பாவிகளாகிய எங்களுக்காக இப்பொழுதும், எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக் கொள்ளும் என்ற செபம் செபமாலையின் முக்கிய பகுதியாகும்.

**செபமாலையில் 20 தேவ இரகசியங்கள் உள்ளன**

மகிழ்ச்சியின் தேவ இரகசியங்கள்

1. தாழ்ச்சி
2. பிறரன்பு
3. ஏழ்மை
4. இறைபற்று
5. மகிழச்சி

ஒளியின் தேவ இரகசியங்கள்

1. மூவொரு இறைவனின் வெளிப்பாடு
2. மரியன்னையின் பரிந்துரை
3. மனந்திரும்பி இறைவனை நாடுதல்
4. இறைமகிமையில் ஆர்வம்
5. ஆராதனை

துக்க தேவ இரகசியங்கள்

1. பாவங்களுக்காக மனம் வருந்துதல்
2. தூய்மை
3. பலம்
4. பொறுமை
5. ஏற்றுக்கொள்ளல்

மகிமை தேவ இரகசியங்கள்

1. விசுவாசம்
2. எதிர்பார்ப்பு
3. இறையன்பு
4. மரியன்னையின் மகிமை
5. மரியன்னை அனைத்துலக அரசி

தினமும் செபமாலை செபிப்பதை என் வாழ்வில் வழக்கப்படுத்திக் கொள்வேன் என உறுதிகொள்ளுங்கள்

S. மெட்டில்டா, மறையாசிரியர், அப்புதளை பங்கு



அருட்பணி. அந்திரியாஸ் பர்னாந்து அ.ம.தி.

# அருளடையாளங்கள் ஓர் அலசல்

11






## திருச்சபையில் தூய ஆவியார்

கடந்த கட்டுரையில் தொடக்க திருச்சபையில் தூய ஆவியார் செயலாற்றிய விதத்தினை ஓரளவு தெரிந்த கொள்ள முயற்சித்தோம். இக்கட்டுரையில் உறுதிப்பூசுதல் எவ்வாறு ஓர் தனி அருளடையாளமாக உருவாக்கம் பெற்றது என்பதைக் கற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

இன்று மேலைத்தேய நாடுகளில் இது ஓர் பட்டமளிப்பு விழா என்று எண்ணப்படுகிறது. அது சரி யார் அவ்வாறு சிந்திப்பது? பிள்ளைகளின் பெற்றோர், மற்றும் அவர்களுடைய ஆசிரியர்கள் கூட அப்படித்தான் நினைக்கின்றார்கள். பட்டப்படிப்பை முடித்த ஓர் மாணவர்க்கு பட்டமளிப்பு வழங்கப்படுகின்றது. படிப்பின் முடிவில் பட்டம் வழங்கப்படுகின்றது. அதுபோல் மறைக்கல்வி படித்து முடிக்கும் தருவாயில் 14 வயதில் உறுதிப்பூசுதல் வழங்கப்படுகின்றது. எனவே இது ஓர் வகை பட்டமளிப்பு விழாவாக இது அமைந்து விடுகிறது. உண்மையிலேயே இது ஓர் தப்பான கருத்துருவாக்கம் என்பதை நாம் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால் பட்டமளிப்பு மேற்கொண்டு படிப்பதற்கு முற்றுப்புள்ளி வைப்பதல்ல மாறாக அதற்கு ஓர் நுழைவாயிலாக அமைகின்றது. இவ்வளவு காலமும் படித்தவை வாழ்க்கைக்கு உறுதுணையாக அமைகின்றது. சவால்களை கண்டு கலங்காமல், எதிர்நீச்சல் போட்டு, வாழ்வில் வெற்றிக்கான வழிசமைக்கின்றது. உறுதிப்பூசுதல் அருளடையாளமும் இவ்வாறே கிறிஸ்தவ வாழ்வில் நாம் கிறிஸ்துவுக்கு சாட்சிபகர எம்மை பலப்படுத்துகின்றது. உறுதிப்பூசுதல் திருமுழுக்கின் நிறைவாக்குகின்றது. கிறிஸ்தவ முதிர்ச்சி வாழ்வின் ஆரம்பமே ஒழிய நிறைவு அல்ல உறுதிப்பூசுதல் எல்லாம் நிறைவாக அமைந்திருக்கும் ஓர் கிறிஸ்தவனை உருவாக்குவதல்ல. மாறாக அதற்குரிய ஓர் ஆரம்பமாக அமைகின்றது.

தொடக்க திருச்சபை இவ்வருளடையாளத்தை ஓர் தனி அருளடையாளமாக கொண்டாடவில்லை. திருமுழுக்கோடு இணைந்தே வழங்கியது. திருத்தூதர் பணி புது வாழ்வை வழங்கும் திருமுழுக்கு அருளடையாளமும், உறுதிப்பூசுதல் அருளடையாளமும் ஒன்றாக வழங்கப்பட்டதற்கான முக்கிய சான்றுகளை தருகின்றது. இதனை பின்வரும் விவிலியப் பகுதி தெளிவாகக் காட்டுகின்றது. “நீங்கள் நம்பிக்கை கொண்டபோது தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டீர்களா?” என்று கேட்டார். அதற்கு அவர்கள் “தூய ஆவி என்னும் ஒன்று உண்டு என்று கூட நாங்கள் கேள்விப்பட்டதில்லையே” என்றார்கள். “அவ்வாறெனில் நீங்கள் எந்தத் திருமுழுக்கைப் பெற்றீர்கள்?” எனப் பவுல் கேட்க, அவர்கள் “நாங்கள் யோவான் கொடுத்த திருமுழுக்கைப் பெற்றோம்” என்றார்கள். அப்பொழுது பவுல், “யோவான் மனம் மாறிய மக்களுக்குத் திருமுழுக்குக் கொடுத்து, தமக்குப் பின்வரும் இயேசுவிடம் நம்பிக்கை கொள்ளுமாறு கூறினார்” என்றார்.

திருமுழுக்குப் பெற்றதும் அவர்கள் மேல் கைகளை வைக்க அவர்கள் தூய ஆவியைப் பெற்றுக் கொண்டனர். ஆனால் காலப்போக்கில் இவ்வருள் அடையாளங்கள் வெவ்வேறாக வழங்கப்பட்டதற்கான சான்றுகளும் உள்ளன. இன்றும் கீழைத்தேய திருச்சபைகள் இவ்விரு அருளடையாளங்களையும் இணைத்தே வழங்குகின்றன. மேலைத்தேய (நமது) திருச்சபையில் இன்று வெவ்வேறாக வழங்குவதற்கான காரணம் என்ன? ஆரம்ப மத்தியகாலத்தில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரிக்கத் தொடங்கியது. குருக்கள் குழந்தைகளுக்கு பிறந்த சில நாட்களில் திருமுழுக்கு கொடுத்தனர். ஆனால் திருமுழுக்கு பெற்றவர் மீது கரங்களை வைத்து ஆவியானவரை வழங்கும் சடங்கு ஆயர்க்கு ஒதுக்கப்பட்டது. (கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்க அதிகரிக்க எல்லைகள் விரிவடையத் தொடங்குகின்றன. எனவே இறைமக்கள் சமூகத்திற்கு பொறுப்பான ஆயர் எல்லா இடத்திலும் ஒரே நேரத்தில் சமூகமளிக்க முடியாது. ஆகவே திருமுழுக்கு பெற்ற குழந்தைகள், உறுதிப்பூசுதல் பெற பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய நிலை உருவாகியது). திருத்தூதர்களே தொடக்க திருச்சபையில் திருமுழுக்கு பெற்றோர் மீது கரங்களை விரித்து ஆவியை வழங்கியதை மேற்கண்ட திருவிவிலியப் பகுதி தெளிவாக்குகின்றது. இம்மரபின் அடிப்படையில் வரலாற்றில் ஆயர்களே இவ்வருளடையாளத்தின் சாதாரண திருப்பணியாளராக செயல்பட்டு வந்துள்ளார். இவ்வாறு ஒன்றாக வழங்கப்பட்ட அருளடையாளம் வெவ்வேறாக வழங்கும் மரபு உருவாகியது.

இன்று திருச்சபையில் 14 வயதில் உறுதிப்பூசுதல் வழங்கப்படுகிறது. மனித வளர்ச்சியோடு, கிறிஸ்தவ வாழ்வின் வளர்ச்சியும் இணைந்து செல்கின்றது. இக்காலக்கட்டத்தில் இளமைப் பருவத்தில் அடியெடுத்து வைக்கும் மாணவர்களின் வாழ்வில், வாழ்வுக்கான பொருள்தேடும் காலம் உருவாகின்றது. இக்காலக்கட்டத்தில் அவர்களுக்கு நிறைய வழிகாட்டுதல்கள், தெளிவுபடுத்தல், ஊக்கப்படுத்துதல் அவசியமாகின்றது. ஆன்மீக வாழ்விலும் இது உண்மையே. திருமுழுக்கு பெற்ற இவர்கள் வாழ்வில் பல கேள்விகள், பல தேடல்கள் இடம்பெறுகின்றன. எனவே இவர்களை வழிநடத்த வாழ்வினை முழுமையாக வாழ எல்லாவற்றையும் விட கிறிஸ்துவுக்குள் வாழ, அவர்க்கு சான்று பகர திடப்படுத்துதல் அவசியமாகின்றது. எனவே அன்னையாம் திருச்சபை அவர்களுக்கு உறுதிப்பூசுதலை வழங்குகின்றது.

இதன் காரணமாக, விண்ணுலகிலும், மண்ணுலகிலும் உள்ள ஒவ்வொரு குடும்பமும் உண்மையிலேயே குடும்பமாய் விளங்குவதற்குக் காரணமாய் இருக்கிற தந்தையிடம் நான் மண்டியிட்டு வேண்டுகிறேன். அவருடைய அளவற்ற மாட்சிக்கேற்ப உங்கள் உள்ளத்திற்கு வல்லமையும் ஆற்றலும் தம் தூய ஆவி வழியாகத் தந்தருள்வாராக! (எபேசி 3:14-16)

உறுதிப்பூசுதலின் வெளி அடையாளம் தலைமீது கைகளை வைப்பதும், நெற்றியில் கிறிஸ்மா தைலம் பூசுதலுமாகும். இக்கிறிஸ்மா தைலம் புனித வாரத்தில் ஆயரினால் ஆசீர்வதிக்கப்படுகின்றது. கைகளை வைத்து, தைலம் பூசுவது அருட்பொழிவின் அடையாளமாக அமைகின்றது. “ஆண்டவராகிய என் தலைவரின் ஆவி என்மேல் உளது. ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார். ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தியை அறிவிக்கவும், உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்தவும், சிறைப்பட்டோருக்கு விடுதலையைப் பறைசாற்றவும், கட்டுண்டோருக்கு விடிவைத் தெரிவிக்கவும் என்னை அனுப்பியுள்ளார். ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழங்கவும், நம் கடவுள் அநீதிக்குப் பழிவாங்கும் நாளை அறிவிக்கவும், துயருற்று அழுவோர்க்கு ஆறுதல் அளிக்கவும், சீயோனில் அழுவோர்க்கு ஆவண செய்யவும், சாம்பலுக்குப் பதிலாக அழகுமாலை அணிவிக்கவும், புலம்பலுக்குப் பதிலாக மகிழ்ச்சித் தைலத்தை வழங்கவும், நலிவுற்ற நெஞ்சத்திற்குப் பதிலாக புகழ் என்னும் ஆடையைக் கொடுக்கவும் என்னை அனுப்பியுள்ளார்”. (எசா 61:1-3)

மேற்கூறப்பட்ட விவிலியப் பகுதி அருட்பொழிவுக்கான காரணத்தை துல்லியமாகக் காட்டகின்றது. எமது கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி ஏடு உறுதிப்பூசுதலினால் ஏற்படும் பயன்களை பின்வருமாறு கூறுகின்றது. “பெந்தக்கோஸ்து நாளில் நிகழ்ந்ததுபோல, உறுதிப்பூசுதலின் போது தூய ஆவியார் சிறப்பாகப் பொழியப்படுவதே அருளடையாளத்தின் பயனாகும். இவ்வருள் பொழிவு ஆன்மாவின் மீது அழியா முத்திரையைப் பதித்து, திருமுழுக்கு அருளை வளரச் செய்கின்றது. இதனைப் பெறுபவர்களைக் கடவுளின் பிள்ளைகள் என்ற நிலையில் ஆழமாக வேரூன்றச் செய்கின்றது. கிறிஸ்துவோடும், திருச்சபையோடும் அவர்களை மிக உறுதியாகப் பிணைக்கின்றது. அவர்களது ஆன்மாவில் தூய ஆவியாரின் கொடைகள் புத்தெழுச்சிப் பெறச் செய்கின்றது. கிறிஸ்தவ நம்பிக்கைக்குச் சாட்சிபகரச் சிறப்பு ஆற்றல் அளிக்கிறது” (எண் 1302)

உறுதிப்பூசுதல் அருளடையாளம் ஊடாக நாம் இறைவனோடு கொண்டுள்ள உறவு வாழ்வில் கிறிஸ்து எமக்கு தந்த வாக்குறுதி நிறைவேற்றப்படுகின்றது. அந்த வாக்குறுதி யாது? “உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன். தந்தை அவரை உங்களுக்கு அருள்வார். அவரே உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார். உலகம் அவரை ஏற்றுக்கொள்ள இயலாது. ஏனெனில் அது அவரைக் காண்பதுமில்லை, அறிவதுமில்லை. நீங்கள் அவரை அறிந்திருக்கின்றீர்கள். ஏனெனில் அவர் உங்களோடு தங்கியிருக்கின்றார். உங்களுக்குள்ளும் இருக்கின்றார்” (யோவா 14:16-17)

வாக்குறுதியாக தரப்பட்ட ஆவியானவரைப் பெற ஆயர், பெறுபவர் மீது கைகளை வைத்து பின்வருமாறு செபிக்கின்றார். “எல்லாம் வல்ல இறைவா, எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தந்தையே! நீரினாலும், தூய ஆவியாராலும் உம் அடியார்கள் இவர்களைப் பாவத்தினின்று விடுவித்து, புதுப்பிறப்பு அளித்து, துணையாளராகிய தூய ஆவியாரை இவர்களுக்குள் அனுப்பியருளும். ஞானமும், மெய்யுணர்வும் தரும் ஆவியாரை, ஆலோசனையும், வல்லமையும் தரும் ஆவியாரை, அறிவும், பக்தியும் தரும் ஆவியாரை இவர்களுக்கு அளித்தருளும். தெய்வபயத்தின் ஆவியாரால் இவர்களை நிரப்பியருளும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்”. (உறுதிப்பூசுதல் வழங்கும் சடங்கு)

கிறிஸ்து பெற்ற அதே ஆவியானவரைத்தான் நாமும் பெறுகின்றோம். இதனை எசாயா ஏற்கனவே கூறி இருக்கின்றார் “ஈசாய் என்னும் அடிமரத்திலிருந்து தளிர் ஒன்று துளிர்விடும். அதன் வேர்களிலிருந்து கிளை ஒன்று வளர்ந்து கனிதரும். ஆண்டவரின் ஆவி அவர்மேல் தங்கியிருக்கும். ஞானம், மெய்யுணர்வு, அறிவுரைத்திறன், ஆற்றல், நுண்மதி, ஆண்டவரைப் பற்றிய அச்ச உணர்வு இவற்றை அந்த ஆவி அவருக்கு அருளும்” (எசா 11:1-2)

தொடரும்...




## வளர்ந்தோருக்கான சுருக்கமான மறைக்கல்வி

### ஆத்தும இரட்சணியம் பெறச் செய்யவேண்டிய காரியங்கள்

இரட்சணியம் / மீட்பு அடைய வேண்டுமெனில் விசுவாச சத்தியங்களையெல்லாம் விசுவசித்து, அவைகளுக்கு ஏற்ப நடப்பது அவசியமாகும். ஆகவே, அனைவரும் தேவ கற்பனைகளையும், திருச்சபைக் கட்டளைகளையும் அனுசரித்து, பாவத்தை தள்ளி, தங்கள் அந்தஸ்தின் கடமைகளையும் சரிவர நிறைவேற்ற வேண்டும்.

### கடவுளுடைய கட்டளைகள் பத்து

**முதலாவது : "உனக்குக் கர்த்தாவான சர்வேசுரன் நாமே, நமக்கு முன்பாக வேறே சர்வேசுரன் உனக்கு இல்லாமல் போவதாக"**

1.

✶ சர்வேசுரன் எல்லாத்தையும் படைத்து, சர்வத்துக்கும் ஆண்டவராயிருக்கிறதினாலே, அவருக்குத் தேவ ஆராதனை, புகழ்ச்சி செய்து, அவருக்கு மாத்திரமே பலிப்பூசை ஒப்புக்கொடுக்க வேண்டும்.

✶ சர்வேசுரனைத் தக்க வணக்கத்தோடு அடிக்கடி மன்றாடி, நாம் அடைந்த நன்மை உபகார சகாயங்களுக்கு நன்றியறிந்த தோத்திரம் சொல்லி, நமக்கு அவசியமானவைகளைக் கேட்க வேண்டும்.

✶ மனிதனுக்கு சரீரமும், ஆத்துமமும் இருக்கிறபடியால், அவன் சர்வேசுரனுக்கு **வெளி ஆராதனையும், உள் ஆராதனையும்** செலுத்த வேண்டும். வாய்ச் செபங்களை சொல்லி செபிப்பதும், திருவழிபாட்டில் பங்கு பற்றுவதும் வெளி ஆராதனையாகவும், அவர் வெளிப்படுத்திய சகல சத்தியங்களையும் உறுதியாய் விசுவசித்து, அவர் பேரில் ஆழமான நம்பிக்கை வைத்து சகலத்தையும் பார்க்க அவரைச் சிநேகிப்பது உள் ஆராதனையாகவும் இருக்கிறது. இவ்வாறு நமது புத்தி மனதைச் சர்வேசுரனுக்குக் கீழ்ப்படுத்தி, உகந்த காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறோம்.

### 2. புனிதர்களுடைய வணக்கம்

உண்டாக்கப்பட்ட பொருட்கள் எவ்வளவு மோலானவையாகயிருந்தாலும், அவைகளுக்கு ஒரு காலமும் தேவ ஆராதனை செலுத்தலாகாது. ஆகையினால்தான் தேவமாதா முதலான புனிதர்களுக்குப் பூசை பலியை நாம் ஒப்புக்கொடுக்கிறதுமில்லை, தேவ ஆராதனை செலுத்துவதுமில்லை. ஆனால், அவர்களைக் குறித்துச் சர்வேசுரனுக்கு பூசைப்பலி ஒப்புக்கொடுக்கும்போது, அவர்களுக்கு அளிக்கப்பட்ட திரளான வரப்பிரசாதங்களுக்காக ஆண்டவரைத் தோத்திரம் பண்ணுகிறோம். மேலும், புனிதர்கள் நமக்காகத் தேவ சமூகத்தில் பரிந்துபேசி, உதவி செய்யும்படி அவர்களையும் மன்றாடுகின்றோம்.

### 3. சுரூப வணக்கம்

ஒரு சுரூபத்தையோ அல்லது சித்திரத்தையோ பார்த்து நாம் சங்கை செய்யும்போது அது சித்திரமும் சுரூபமும் சுட்டிக்காட்டும், ஞாபகப்படுத்தும் இயேசுநாதர் சுவாமி, தேவமாதா மற்றும் புனிதர்களை நினைத்து அவரவர்களுக்குத் தக்க வணக்கத்தைச் செலுத்துகிறோமே தவிர, சுரூபங்களுக்கு தேவ ஆராதனை செலுத்துவது கிடையாது.

### 4. அஞ்ஞானக் காரியங்கள்

பேய், பசாசுகளைக் கும்பிடவோ, அவற்றிற்கு யாதொன்றும் ஒப்புக் கொடுக்கவோ கூடாது. அவைகளிடத்தில் குறி கேட்கவும் கூடாது. யாதொரு உலக நன்மை அடைகிறதற்காகிலும், வியாதி குணமாகிறதற்காகிலும், பிறருக்கு சேதம் வருவிக்கிறதற்காகிலும் பசாசின் உதவி ஒத்தாசையைக் கேட்கவே கூடாது. இவற்றை கடவுள் அருவருக்கிறார்.

நல்ல நாள், கெட்ட நாள், சகுன சாஸ்திரம், நிமித்தம் பொருத்தம் முதலான அஞ்ஞான சடங்குகளும், பரிகாரங்களும், பில்லி, சூனியம், மை பார்த்தல் போன்ற செயற்பாடுகளும் இந்த முதலாம் கட்டளையால் விலக்கப்பட்டவையாகும்.

**வினாக்கள் :**

1. தேவ ஆராதனை என்றால் என்ன?
2. உள் ஆராதனை, வெளி ஆராதனை பற்றி குறிப்பிடுக?
3. புனிதர்களுக்கான வணக்கமும், சுரூப வணக்கமும் தகாதவையா? விளக்குக?
4. பசாசின் உதவி ஒத்தாசையை நாடலாமா? விளக்குக?

*தொடரும்....*

**விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி**
*வளர்ந்தோருக்கான சுருக்கமான மறைக்கல்வி*
*ஆசிரியர், ஞான ஒளி,*
*கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,*
*இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய*
*மாவத்தை, கொழும்பு - 08.*




# குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

*பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா*
*உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.*

## மனப்பான்மை

### சென்றவாரத் தொடர்ச்சி

சிறுவயதில் பிள்ளையின் உடல் வளர்ச்சிக்கு சத்துள்ள உணவு தேவை. ஆடம்பரமான விலையுயர்ந்த உணவு வகைகள் அல்ல. ஆகவே ஒரு குழந்தையின் உடல், மன வளர்ச்சிக்கு நல்ல அத்திவாரம் தேவை. அன்பு, புரிந்து கொள்வது, அறிவு வளர்ச்சி எல்லாமே தேவை. அளவுக்கு அதிகமாகப் பிள்ளைகளைப் பாதுகாப்பது பிழை, சமுதாயத்துக்கு முகம் கொடுக்க சிறுவயதில் இருந்தே உறுதியான ஆளுமையைப் பெற்றோர் கொடுக்கவேண்டும். 5ஆம் வகுப்பு, O/L, A/L வகுப்புகளில் திறமைச் சித்தி எடுக்க வேண்டும் என்பதில் மட்டும் கவனம் செலுத்தும் பெற்றோர் இவற்றில் கவனம் செல்வதில்லை. இறைவன் மனித அனுபவங்கள் மூலமே மனித அறிவின் மூலமே இறைவனிடமிருந்து பல கனிகளைப் பெறுகின்றோம். அவற்றைப் பயன்படுத்த வேண்டும். மனித சுபாவமும், இறைவிருப்பமும் சேரவேண்டும். அறிவோடு பயன்படுத்தவேண்டும்.

விளம்பரங்கள் மூலம் என்ன செய்கிறார்கள்? ஒரு பற்பசை மற்றதை விட நல்லது என விளம்பரம் செய்வதன் மூலம் மக்களின் மனப்பான்மையை மாற்றுவதே அவர்களது நோக்கம். சமுதாயம், பெறுமதி, சொத்து பணக்காரனாகவேண்டும் என்ற ஆசை, ஸ்மாட் தொலைபேசியைப் பாவிக்கவேண்டும் என்ற விருப்பம் எல்லாம் விளம்பரங்கள் மூலம் மாறலாம். பிள்ளைகளின் மனப்பான்மையும் மாறும். தொலைக்காட்சி மூலம், வானொலிகள் மூலம் போட்டி மனப்பான்மையை வளர்க்கின்றனர் சரி எது? பிழை எது? என்பதைத் தெரிவுசெய்து நிற்பந்திக்காது பிள்ளைகளுக்குக் கூறவேண்டும். ஒருவருடைய முன்மாதிரிகையே நல்ல போதனையாகும். பெற்றோர், ஆசிரியர்கள், முன்மாதிரியாக வாழவேண்டும்.

பரம்பரை மூலமும் ஆளுமையில் தாக்கம் ஏற்படும். ஒருவரது நிறம், தலைமுடியின் நிறம், உயரம் போன்றவை பரம்பரை மூலம் ஏற்படலாம். ஒருவரது செயற்பாடு சூழல் மூலம் ஏற்படும். ஒருவரின் அறிவுத் திறனும் பரம்பரை மூலம் ஏற்படலாம். மனப்பான்மை, பெறுமதிகள், மதம், சூழல் மூலம் ஏற்படும்.

மேலே கூறப்பட்ட விடயங்கள் சாதாரணமான செயற்பாடுகளைப் பற்றியவையே. ஆனால் இயற்கைக்கு மாறான செயற்பாட்டைக் கண்டதும் அவருக்குப் பைத்தியம் என்பர். ஏன் அப்படிப் பைத்தியம் என்கின்றனர்? அவரது செயற்பாடு மாறுபாடாக இருப்பதே ஒருவரது செயற்பாடு எல்லா இடத்திலும் ஒரு மாதிரியானதே என்று கூறமுடியாது. ஒரு சமூகத்தில் சாதாரணமான நடத்தை வேறொரு சமூகத்தில் ஏற்கமுடியாத நடத்தையாக மாறலாம். பழைய காலத்தில் எமது கிராமங்களில் பெண்கள் குறுக்குக்கட்டுடன் இருப்பர். ஆனால் இன்று அவ்வாறில்லை மேலாடை உடுக்கவேண்டும் என்பர். வெளிநாட்டில் நீச்சல் உடையுடன் இருப்பர். அது எமது கிராமத்துக்குப் பொருத்தமில்லாமல் இருக்கலாம். முன்பு கச்சை கட்டிக்கொண்டு வேலை செய்வர். ஆனால் இன்று அப்படியல்ல. அன்று கச்சைகட்டுவது சாதாரணமானது. ஆனால் இன்று அசாதாரணமானது.

இயற்கைக்கு மாறாக செயற்படும் மனநோய் இருவகைப்படும். **நிரோசிஸ், சைக்கோசிஸ்** என இருவகையுண்டு. இரண்டுக்கும் என்ன வேறுபாடு? **நிரோசிஸ்** நோய் உள்ளவர்களால் சாதாரணமாக அன்றாட வேலைகளில் ஈடுபடமுடியும். செயற்படலாம். **சைக்கோசிஸ்** என்பது யதார்த்தத்துடன் ஈடுபடமுடியாது. தமது உலகிலேயே வாழ்வர்.

**நிரோசிஸ்** நிலையில் இருப்பவர்கள் எல்லாமே கரைச்சலாக இருக்கிறது என நினைப்பர். மனதில் கட்டுப்படுத்த முடியாத சிந்தனைகள் வரும். எதிர்மறையான சிந்தனைகள் வரும். யாரையாவது கொலை செய்ய வேண்டும்போல் இருக்கும். காரணமில்லாது இது வரும். கட்டுப்படுத்த முடியாமல் இச்சிந்தனை வரும். இன்னும் சிலருக்கு அடிக்கடி கை கழுவவேண்டும் போல் இருக்கும். சுத்தத்தைப் பற்றி அதிகம் கஷ்டப்படுவர் புத்தகங்கள் சாமான்களை அடிக்கடி அடுக்கிக்கொண்டிருப்பர். பின்பு அதை மாற்றுவார். இது நடத்தை பற்றியது. ஆனால் காரணமில்லாது ஒரு உணர்வு அதிகமாகச் செயற்படும். செயற்படுவர். இதைக் கிஸ்ரேறியா என்பர். துள்ளிப்பாயும் தவளையைக் காட்டமுடியாது. கண்டால் சத்தம் போட்டு மேசைக்கு மேல் பாய்வர். கலவரப்படுவர். தம்மால் கட்டுப்படுத்த முடியாது

**சைக்கோசியா** என்பது தமது உலகிலே வாழ்வர். யதார்த்தத்தை விட தூரமாகிவிடுவர். இதில் பலவகை உண்டு. ஒன்று தனது அறையில் தனது உலகில் இருந்தவாறு யாருடனும் கதைக்காது வாழ்வர். இது இளம் வயதில் வரும். இதற்கு மருந்து இல்லை. மாற்றுவது கடினம். மேலும் சில பயங்கள் இயற்கைக்கு மாறாக வரும். எல்லோரும் எனக்குப் பின்னாலே வருகின்றனர். கொலை செய்ய வருகின்றனர். எல்லாமேஆபத்தானது என்பர். என்னைப் பற்றியே பிரசங்கம் செய்கிறார் என்பர். இப்படிப்பட்டவர்களால் சாதாரணமான உலகில் வாழமுடியாது கஷ்டப்படுவர். இந்த நோயில் எனது வயிற்றில் இயேசு வளர்கின்றார் என்று சில பெண்கள் கூறுவர். நான் தேவதாய் என்பர். நிரோசிஸ் நிலையில் இருப்பவர்களுக்கு உளநல ஆலோசனை மட்டும் கூறாது உளநல மருத்துவரின் துணையை நாடவேண்டும்.

*தொடரும்...*

# இறந்த ஆன்மாக்களின் பெயர்கள் கார்த்திகை மாதம் வாசிக்கப்பட வேண்டுமோ?

அருட்தந்தை. இக்னேசியஸ் வர்ணகுலசிங்கம்
தேசிய வழிபாட்டு இயக்குனர்

1. இரண்டாம் வத்திக்கான் சங்கம், "இவ்வுலக வாழ்வை முடித்த ஆன்மாக்கள் தூய்மைப்படுத்தப்படுகின்றனர்" (திருச்சபை எண் 49) என்றும், "விண்ணகத்திலுள்ள புனிதர்களுக்கும், சாவுக்குப்பின் இன்னும் தூய்மைப்படுத்தப் பெறுகின்ற நம் சகோதரர்களுக்கும் நமக்குமுள்ள நெருங்கிய உறவை (புனிதர்களின் தோழமையை) திருச்சபை ஏற்றுக்கொள்கின்றது" (திருச்சபை எண் 51) என்றும் கூறியுள்ளது. இதன் மூலம் சாவுக்குப்பின் "தூய்மைப்படுத்தப்படும் நிலையைச்" சங்கம் ஏற்றுக் கொள்கின்றது.
2. அனைத்து திருப்பலிகளிலும், உயிரோடு வாழ்பவர்களுக்கும், இறந்தவர்களுக்காகவும் திருச்சபை செபிக்கிறது, செபித்துக் கொண்டு வருகின்றது.
3. வழிபாட்டு ஆண்டில் விசேஷமாக கார்த்திகை மாதம் இறந்த ஆன்மாக்களுக்கென ஒதுக்கப்பட்டு அவர்களின் நித்திய இளைப்பாற்றிக்காக திருச்சபை விசுவாசிகள் வழியாக செபிக்கின்றது.
4. இறந்தவரின் பெயர் வாசித்தால் தான் ஆன்மாவிற்கு நித்திய இளைப்பாற்றி கிடைக்கும் என்ற நியதி இல்லை.
5. இறந்தவரின் பெயர்கள் கொடுக்கும்போது பெயரை கொடுக்கும் நபரும் திருப்பலியில் கலந்து கொள்வது முக்கியமாகும்.
6. கார்த்திகை மாதத்தில் சில ஆலயங்களில் சொற்ப பெயர்கள் கொடுக்கப்படும்போது அப்பெயர்களை வாசிக்கலாம். ஆனால் தினமும் ஒரு ஆலயத்தில் 30 - 200 பெயர்கள் கொடுக்கப்படும்போது அப்பெயர்களை வாசிப்பது நடைமுறை சாத்தியமில்லை. இச்சந்தர்ப்பத்தில் திருப்பலிக்கு முன்பு பீடத்திற்கு முன்னால் ஒரு பெட்டிவைத்து பெயர்களையும், விரும்பிய பணத்தையும் பெட்டியில் இடலாம்.
7. பெயர்களை ஏனைய மாதங்களிலும் அதாவது இறந்தவரின் பிறந்த தினம், இறந்த தினம், அன்று அல்லது அந்த ஆன்மா நினைவுக்குவரும் போது திருப்பலியை ஒப்புக்கொடுப்பது நலமாகும்.
8. இறந்த ஆன்மாக்களை நினைவுப்படுத்தி அவர்களுக்காக செபித்து திருப்பலி ஒப்புக்கொடுக்க நாம் கடமைப்பட்டிருக்கின்றோம்.
9. ஒரு திருப்பலியில் எப்போதும் எழுந்தேற்றத்திற்கு பின்பு பெயர்களை வாசிக்க சந்தர்ப்பமும், அதை அடுத்து சகல இறந்த ஆன்மாக்களை பொதுவாக ஞாபகப்படுத்தவும் சந்தர்ப்பம் இருக்கின்றது. கார்த்திகை மாதத்தில் அதிகமான பெயர்கள் இருக்கும்போது அச்சந்தர்ப்பத்தில் சற்று மௌனம் காத்து இறந்தவர்களை நினைவு படுத்தி அவர்களுக்காக செபிப்பது நலமாகும்.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்....




## பொதுக்காலத்தின் 31வது ஞாயிறு 02.11.2014 (இறந்த விசுவாசிகள் அனைவரின் நினைவு)

**வாசக விளக்கம்:** இன்று நாம் இறந்தோர் அனைவரது நினைவு நாளைக் கொண்டாடுகின்றோம். நமது வாழ்க்கைப் பயணம் சாவை நோக்கியே நகர்கின்றது. ஆனால் வாழ்வு சாவோடு முற்றுப் பெறுவது இல்லை. சாவிற்குப் பிறகும் ஒரு வாழ்வு உண்டு என்பதை இன்றைய விழாவும் வாசகங்களும் நமக்கு நினைவூட்டுகின்றன. பணத்திற்கும் புகழுக்கும் பெருமைக்கும் ஆசை கொண்டு தான்தோன்றித்தனமாய் மனம்போன போக்கின்படி வாழ்ந்த மக்களை இறைவாக்கினர் மலாக்கி வழியாக இறைவன் சாடுவதை இன்றைய முதல் வாசகத்தில் பார்க்கின்றோம். தெசலோனிக்க மக்கள் துன்பங்களுக்கும் வேதகலாபனைகளுக்கும் மத்தியில் தங்கள் விசுவாசத்தில் நிலைத்திருப்பதை பாராட்டும் பவுல் அடியார் தொடர்ந்தும் அவர்கள் சாட்சிய வாழ்வில் நிலைத்திருக்க உற்சாகமூட்டுவதை இரண்டாம் வாசகத்தில் காண்கின்றோம். நாம் மீட்புப் பெற்றவர்களாக கடவுளோடு நிலைத்து வாழ்வதற்கு இவ்வுலகில் நாம் எப்படி வாழவேண்டும் என்பதை இன்றைய நற்செய்தி எடுத்துரைக்கின்றது. எல்லா மக்களும் மீட்புப் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு வாழ்ந்த இயேசுவின் வாழ்வு ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது. இயேசு வெளிப்படுத்திய நெறிமுறைகளில் நாம் வாழும்போது மீட்பை நமதாக்கிக் கொள்ள முடியும். எனவே இறுதி நாளில் அனைவரும் தீர்ப்புக்குள்ளாக்கப்படும்போது ஆண்டவரின் வலப்பக்கம் நிற்பவர்களாக இறையாட்சியில் நுழையும் வரம்வேண்டி பலியில் இணைவோமாக...

**முதல் வாசகம் :** மலாக்கி 1:14-2:1-2,8-10
நெறிதவறி நடந்தீர்கள் உங்கள் போதனையால் பலரை இடறி விழச் செய்தீர்கள்.

**பதிலுரைப்பாடல் :** என் நெஞ்சம் அமைதிபெற உம் திருமுன் வைத்துக் காத்தருளும்.

**இரண்டாம் வாசகம் :** 1 தெசலோ 2:7-9,13
கடவுளுடைய நற்செய்தியை மட்டுமன்றி எங்களையே உங்களுக்குக் கொடுத்துவிட ஆவலாய் இருந்தோம்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா உங்கள் தந்தை ஒருவரே அவர் விண்ணகத்தில் இருக்கிறார். கிறிஸ்து ஒருவரே உங்கள் ஆசிரியர் அல்லேலூயா

**நற்செய்தி :** மத்தேயு 23:1-12

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

இறையாட்சியில் கடவுளோடு நிலைத்துவாழும் பேற்றினை பெற்றுக்கொண்ட காலஞ்சென்ற எமது திருத்தந்தையர், ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் உம்மை நாள்தோறும் புகழ்ந்து பாடவும், பூவுலகில் உள்ள எமக்காக உம் இரக்கத்தை வேண்டவும் வரமருள வேண்டுமென்று...

இறந்த விசுவாசிகள் அனைவரையும் நினைவுகூரும் இன்றைய நாளினிலே எமது நாட்டில் யுத்தம், வன்செயல் கலவரம் சுனாமி, போன்றவற்றால் உயிர் இழந்தவர்க்கும் நாட்டிற்காக தம்மை அர்ப்பணித்து உயிர் நீத்த அனைவருக்கும் உமது இரக்கத்தையும் பேரன்பையும் பொழிந்து இறையரசில் உம்மோடு என்றும் நிலைத்து வாழ வேண்டிய வரத்தை தந்தருள வேண்டுமென்று..

கிறிஸ்தவனது வாழ்வு இந்த மண்ணோடு முடிந்துவிடுவதில்லை. அது இயேசுக்கிறிஸ்துவில் புதுவாழ்விற்கு எம்மை இட்டுச் செல்கிறது என்பதையும், மண்ணகத்தில் நாம் வாழும் அர்த்தமுள்ள வாழ்வே விண்ணக வாழ்விற்கான வெகுமதியை எமக்குப் பெற்றுத் தருகின்றது என்பதையும் உணர்ந்தவர்களாக நாமும் நீதிமான்களாக வாழ்ந்து இறையரசைப் பெற்றிட வரமருள வேண்டுமென்று...

## பொதுக்காலத்தின் 32வது ஞாயிறு 09.11.2014

**வாசக விளக்கம்:** பசித்திரு... தனித்திரு... விழித்திரு... இன்றைய வாசகங்கள் ஆண்டவரின் இரண்டாம் வருகையை எதிர்நோக்கி வாழ அழைப்பு விடுக்கின்றன. முதல் வாசகம் உயரிய ஞானத்தின் மீது தாகம் கொள்ளவும், ஞானத்தை தேடவும், ஞானத்தை குறித்து விழிப்பாயிருக்கவும், அன்பு செய்யவும் அழைப்பு விடுக்கின்றது. கிறிஸ்துவின் வருகைக்கு முன் இறந்தவர்கள் கிறிஸ்து வரும் போது நிலைவாழ்வில் பங்கு பெறுவார்களா? கிறிஸ்துவின் வருகை எவ்வாறு இருக்கும் என்ற கேள்விக்கு இன்றைய இரண்டாம் வாசகத்தால் விடை பகர்கின்றார் தூய பவுல் அடியார். நற்செய்தியாளர் தூய மத்தேயு பத்துக் கன்னியர்களின் உவமை வழியாக இறுதிநாளில் இரண்டாம் வருகையின் காலநேரத்தின் அறியாமையையும், இறுதிநாளின் வருகை பற்றிய உறுதிப்பாட்டையும் எப்போதும் விழிப்பாய் இருக்கவும் தகுந்த தயாரிப்போடு உள்ளவர் பாராட்டப்படுவர் என்றும், தயாரிப்பற்றோர் தண்டிக்கப்படுவர் என்பதையும் எடுத்துரைக்கின்றார். நாமும் வாழ்க்கை என்னும் விளக்கை எண்ணெய் என்னும் நற்செயல்களால் நிரப்பி உண்மையுள்ள விசுவாசிகளாய் என்றும் விழிப்பாய் இருக்க இறையருளை வேண்டுவோமாக...

**முதல் வாசகம் :** சா.ஞா 6:12-16
ஞானத்தை தேடுவோர் அதைக் கண்டடைவர்

**பதிலுரைப்பாடல் :** என் இறைவா என் உயிர் உம்மீது தாகம் கொண்டுள்ளது.

**இரண்டாம் வாசகம் :** 1தெசலோ 4:13-18
இயேசுவோடு இணைந்த நிலையில் இறந்தோரைக் கடவுள் அவருடன் அழைத்து வருவார்

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா விழிப்பாய் இருங்கள்
ஆயத்தமாய் இருங்கள் ஏனெனில் நீங்கள்
நினையாத நேரத்தில் மானிட மகன் வருவார்
அல்லேலூயா

**நற்செய்தி :** மத்தேயு 25:1-13

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

எப்பொழுதும் தன் மக்களை விழிப்புடன் வழிநடத்தும் தூய திருச்சபையையும் அதன் தலைவரான திருத்தந்தை பிரான்சிஸ் அவருடன் இணைந்து செயலாற்றும் ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிக்கவும், அவர்கள் என்றும் தம் மக்களுக்காக விழிப்புடன் செயலாற்றவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

எமது நாட்டின் அரசியல், சமய, சமூகத் தலைவர்கள் அனைவரும் விழிப்புடன் மக்களை வழிநடத்தவும், மதச்சுதந்திரத்தையும், நல்லிணக்கத்தையும் பேணிப் பாதுகாக்கவும், அனைத்து மக்களையும் மனித மாண்போடு மதித்து சமமாக நடத்தவும், நாட்டின் வளர்ச்சிப் பாதையில் அனைவரையும் ஒன்றிணைக்கவும் வேண்டிய வரங்களை தந்தருள வேண்டுமென்று..

கடவுளின் ஞானமாகிய கிறிஸ்து இயேசுவின் இரண்டாம் வருகைக்காக நாமும் ஞானமுடன் விழிப்பாய் இருக்கவும், தகுந்த தயாரிப்புடன் இருந்து அவரை வரவேற்கவும், முன்மதியுள்ள கன்னியரைப் போன்று உண்மையான விசுவாசிகளாய் வாழவும், உலக காரியங்களை மறந்து ஆன்மீக நற்செயல்களில் விழிப்பாய் இருக்கவும் வேண்டிய வரங்களை பொழிந்தருள வேண்டுமென்று...

## பிரார்த்தனை



வரிசைப்படுத்தப்பட்ட
தேவைகளுடன்
வணக்க ஸ்தலம் சென்று
கொடுத்து வைத்த
பொருட்களை
கேட்பது போல
எதையும் விடாமல்
எல்லாவற்றையும்
கேட்டேன்.

கைக்குள் பொத்தி
வைத்திருந்த
பணத்தை எடுத்து
முற்தொகையாய்
உண்டியலுக்குள்
திணித்தபடி
கேட்டவரங்கள்
கிடைத்தால்
பெருந்தொகையாய்
தருவதாய்
உறுதியளித்தேன்.

வேண்டுதல் முடிந்து
திரும்பிய வேளை
வாசலில் காத்திருந்த
பிச்சைக்காரனின்
பரிதாபக்குரல்
என் காதுகளை
தட்டியபோதும்
ஏனோ என் கைகள்
மாத்திரம்
பணப்பையை
எட்டவில்லை.

சிறிது தூரம்
சென்றபோதுதான்
அவன்தான்
கடவுளின்
மறுரூபமோ என
எண்ணத்
தோன்றியது.

எதையும்
இழக்காமல்
எவருக்கும்
கொடுக்காமல்
எல்லாவற்றையும்
எனதாக்கவேண்டும்
என்கின்றது
இந்த பேராசை
பிடித்த மனசு.

ஒரு நாளாவது
கடவுளைக்காண
வேண்டும்
என்ற ஆவலில்
அலையும் நாம்
ஒவ்வொரு நாளும்
அவரது சாயலில்
நம்மைத்தேடி வரும்
எண்ணிலடங்கா
ஏழை,எளியவரை
ஏறெடுத்துக் கூட
பார்க்க விரும்புவதில்லை.

ஏழையின் வயிறு
ஒட்டி உலர்ந்து
கொட்டாவியுடன்
வாய்பிளக்க
உண்டியலின்
வயிற்றுக்குள்
செரிமானமாகாமல்
பல சில்லறைக்காசுகள்
வெளிறேத்துடித்தன.

**ஆக்கம்:– ச.யேசுதாஸ்**
CMF

## இறந்த விசுவாசிகள் அனைவரின் நினைவு





இறப்பவர் அனைவரும் விண்ணகம் சேரவேண்டும் என்பது தான் இறைவனின் திருவுளம் ஆனால் இறப்பவர் அனைவரும் இறைவனின் தரிசனத்தைப் பெறும் அளவுக்குத் தூயோராக இருக்கமாட்டார்கள். அவர்கள் தங்களுடைய பாவங்களுக்காக முழுமையாகப் பரிகாரம் செய்திருக்க மாட்டார்கள். மோட்சத்திற்கும், நரகத்திற்கும் இடையேயுள்ள இடம் தான் உத்தரிக்கிற இடம். உத்தரிக்கிற நிலை உண்டு என திருச்சபை கற்பிக்கிறது. 11ஆம் நூற்றாண்டு முதல் திருச்சபையில் இறந்த விசுவாசிகளின் நினைவு இருந்ததாக கூறப்படுகின்றது. ஐந்தாவது நூற்றாண்டு முதல் இறந்த விசுவாசிகளுக்காக திருப்பலி ஒப்புக் கொடுக்கும் வழக்கம் இருந்தது.

விண்ணக நற்பேறு பெற்றவர்களுக்கு நமது செப உதவி அவசியமில்லை. நரகத்தில் விழுபவர்களுக்கு நமது செபத்தால் பலனில்லை. ஆனால் குறித்த காலம் உத்தரிக்கிற நிலையில் இருக்கும் ஆன்மாக்களுக்கு நமது செப உதவி மிக மிக அவசியம்.

நாம் அனைவரும் ஒரே உடலின் உறுப்புக்கள் என்பதால், நமது செபம் மற்றவர்களுக்குத் தேவை. திருப்பலியில் இறந்த விசுவாசிகளின் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்று திரிதெந்து திருச்சங்கம் வலியுறுத்துகின்றது.

புனித மொனிக்கம்மாள் தாம் இறக்கும் வேளையில் தமக்கு பெரும் சிலுவையாக இருந்து பின்னர் மனந்திருப்பிய புனித அகுஸ்தினாரிடம் பின்வருமாறு வேண்டினார். “மகனே நீ திருப்பலி ஒப்புக்கொடுக்கும் போது என்னையும் நினைவில் கொண்டு எனக்காக நம் ஆண்டவரிம் மன்றாட வேண்டும். இறந்த விசுவாசிகளுக்காக செபிப்பதும், அவர்களுக்காக திருப்பலி ஒப்புக்கொடுப்பதும், பாவகழுவாய் செய்வதும், அவர்களுடைய கல்லறைக்குச் சென்று அவர்களுக்காக மன்றாடுதலும் தான தர்மங்கள் செய்வதும் சிறந்த செயலாகும்.

# திருஅவையின் தீபாவளி வாழ்த்துச் (



## பிறரை வரவேற்கும் ஒரு கலாச்சாரத்தை உருவாக்குவது மக்களின் ஏக்கமாக இருந்துவருகின்றது.

கிறிஸ்தவர்களும் இந்துக்களும் ஒன்றிணைந்து அனைவரையும் வரவேற்று ஒன்றிணைக்கும் கலாச்சாரத்தை வளர்க்க வேண்டும். வன்முறை, ஒதுக்கி வைத்தல், போன்ற நிகழ்வுகளைத் தவிர்த்து பிறரை வரவேற்கும் ஒரு கலாச்சாரத்தை உருவாக்கவேண்டும். உலகமயமாக்கலில் நல்விளைவுகளும் உண்டு. தீய விளைவுகளும் உண்டு. மத அடிப்படை வாதம் உலகமயமாக்கலில் நல்விளைவுகளிலிருந்து ஏழைகள் ஒதுக்கி வைக்கப்படல், பொருட்களே பெரிதென்ற எண்ணம், நுகர்வுக்கலாச்சாரம், பாராமுகம், பிறர் குறித்து அக்கறையின்மை, நமக்குள்ளேயே முடங்கிப்போதல், குழந்தைகளும் பெண்களும் சுரண்டப்படுதல், முதியோர் நோயாளிகள் மாற்றுத்திறனாளிகள் மற்றும் அகதிகள் சரியான முறையில் நடாத்தப்படாமை போன்றவை பிறரை விலக்கிவைக்கும் கலாச்சாரத்தின் விளைவுகளாகும். ஆகையால் பொறுப்புள்ள பகிர்தல் வழியே கிட்டும் வரவேற்று இணைக்கும் கலாச்சாரம் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உருவாக்குகின்றது.



## மீண்டும் மகிழ்ச்சி நிறைந்த இதயப் பூர்வமான தீபாவளி வா

ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்க மதம் அழிவுறும் நிலையில் இருந்தபோதும் இவைனின் திட்டம் வேறுவிதமாக அமைந்திருந்தது.இறைவன் கத்தோலிக்க திருச்சபையை கைவிடவில்லை. நெருப்பினால் பொன் புடமிடப்படுவதுபோல ஒல்லாந்தரின் துன்புறுத்தலால் இலங்கை கத்தோலிக்க திருச்சபை சுத்திகரிக்கப்பட்டு புதிதாய் மலர்ந்த புத்துயிருடன் பிரகாசமாய் திகழவேண்டும் என இறைவன் திருவுளம் கொண்டார்.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இலங்கைக் கத்தோலிக்கர்கள் தமது விசுவாசப் புதுப்பித்தல் எதுவுமின்றி, ஆயனில்லாத மந்தைகள் போல் துன்பப்பட்டனர். அப்போதுதான் இலங்கை கத்தோலிக்கருக்குப் பணிபுரிய தம் வாழ்க்கையை முற்றாக அர்ப்பணிக்கும் படியாக எளிமையான ஓர் இளம் குரு இலங்கைக்கு வருகைதந்தார். அவரே "இலங்கையின் அப்போஸ்தலர்" என்று அன்போடு அழைக்கப்படுகின்ற அருளாளர் யோசேவ்வாஸ் அடிகளார் ஆவார்.

### இலங்கையில் இறைவனின் திருவுளம்

திருத்தூதரான தூய பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் "கடவுளிடம் அன்பு கூர்பவர்களோடு அதாவது அவரது திட்டத்திற்கேற்ப அழைக்கப்பட்டவர்களோடு, அவர்கள் நன்மைக்காகவே ஆவியார்

அவர்களைத் தொடர்ந்து ஒல்லாந்தருடைய காலத்தில் வேறொரு தீமை தோன்றியது. இலங்கைக் கத்தோலிக்கர் மதச் சுதந்திரத்தை இழந்தனர். கல்வின் கட்சியினரான ஒல்லாந்தர் கத்தோலிக்கரைக் கடின கலாபனைக்குட்படுத்தினர். கடவுளோ அதிசயமான முறையிலே தீமையை நன்மையான முறையில் மீண்டும் மாற்றினார். கத்தோலிக்க விசுவாசத்தைக் காப்பாற்றவும் மீண்டும் உறுதியான அத்திவாரத்தில் நிறுவவும் ஒருவரை அனுப்பினார். இவரே அருளாளர் யோசேவ்வாஸ் அடிகளார் ஆவார்.

### கோவை இராச்சியம்

பாரத கண்டத்தின் மேற்குக் கரையிலுள்ள கோவை இராச்சியம் மலைகளும், நதிகளும், சோலைகளும், தடாகங்களும் செறிந்து பல இயற்கை வளங்களும் பொருந்திய நாடு. இங்கு இரு பெரும் ஆறுகள் பல கிளைகளாகப் பிரிந்து பல தீவுகளை வளைந்தும் செழிப்புண்டாக்குவன. இங்குள்ள பல்வேறு கிராமங்களில் வாழும் மாந்தர் சரித்திரமறியாக் காலமுதல் விவசாயத்திலும், வாணிபத்திலும் வளமுடன் வாழ்ந்து வந்தனர். பபிலோனியர், பாரசீகர், கிரேக்கர், உரோமர் போன்ற அந்நியருடன் கொண்டிருந்த தொடர்பின் சான்றுகள் இன்றும் வெளிவருகின்றன.

### கோவை இராச்சியத்தில் கத்தோலிக்க சமயம்

கீழைத்தேச நாடுகளுக்கு வியாபார நோக்கமாக வந்த போர்த்துக்கேயர் 16ஆம் நூற்றாண்டிலே தமது தலைமையகத்தினை கோவையில் அமைதர்தனர். வியாபாரிகளைத் தொடர்ந்து வந்த குருக்கள் கத்தோலிக்க சமயத்தைப் பரப்பினார்கள். அந்நூற்றாண்டு முடியும் முன்னரே பல்லாயிரக்கணக்கான இந்தியர்கள் கத்தோலிக்க மறையைத் தழுவிக் கொண்டார்கள். இவர்களுக்குள்ளே கோவையைச் சேர்ந்த கொங்கணிப் பிராமணர் சிறந்தவர்களாவார்.

இவர்கள் போர்த்துக்கேயரின் சமூக, சமயப் பழக்கவழக்கங்களை கைக்கொள்வதில் கொண்டிருந்த ஆர்வத்தினால் தங்களில் இனத்திலிருந்தும், குலத்திலிருந்தும் தங்களை தனிமைப்படுத்திக் கொண்டார்கள். எனினும் அவர்கள் தங்கள் முன்னோரின் குடும்ப பழக்கவழக்கங்களையும், கிராமத்தின் எளிமையான வாழ்க்கை முறையையும் பேணி வந்தார்கள்.

தேர்ச்சிபெற்றிருந்தார். பா
போர்த்துக்கேய மொழியிலே
அக்காலத்தில் போர்த்துக்கேய
ஆட்சி மொழியாகவும், மக்கள
விளங்கியதோடு கிறிஸ்தவ வி
கலாச்சாரத்தையும் பரப்பும் ஊ
கிறிஸ்தோப்பர் வாஸி
மரிய டொ மிரண்டா. அவர்
என்னும் அயற்கிராமத்தைச்
வாஸ் குடும்பத்தைப்போலவே
குடும்பமும் பண்பும், கத்தோ
கொண்டு விளங்கியது. அவர்
ஆண்பிள்ளையும், அஞ்சலா
இருந்தார்கள். இந்நிலையில் கு
பெருமை சேர்க்கின்ற கு
இலங்கைக் கத்தோலிக்க
தனது பெயரை பதிப்பவராக
ஒரு எடுத்துக்காட்டான கரு
கீழைத்தேச விசுவாசத்தின்
கிறிஸ்தோப்பர் வாஸ் குடும்பத்
யாக யோசேப் பிறந்தார்.

அருளாளர் வாழ்வும் ப



# அருளாளர் யோசேவ்வாஸின் வாழ்வும் பணியும்

ஆக்கம் : காமலின் தயானி டேவிட்

அனைத்திலும் ஒத்துழைக்கிறார் என்பது நமக்குத் தெரியும்.......". எனும்வசனமானது இலங்கை நாட்டின் கத்தோலிக்க மத்திதன் நிலைகளை தெளிவாகக் காட்டுகின்றது. கடவுளின் தன்மையும், இரக்கமும் தீமையை நன்மையாக மாற்றும் என திருத்தூதர் சொன்னதை இலங்கை கத்தோலிக்க திருச்சபை சரித்திரத்தில் இரு பிரதான சம்பவங்கள் சரியெனச் சுட்டுகின்றன.

எந்த நாடும் அரசியற் சுதந்திரத்தைப் பெரிதாக மதிக்கிறது. 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் நமது நாட்டின் ஒரு பகுதியைக் கைப்பற்றியது. சுதந்திரம், இறைமைக்கு இழுக்குத்தான். ஆனால் அந்தத் தீமையை நன்மையாக மாற்றி, நமது நாட்டுக்கு கத்தோலிக்க விசுவாசத்தைக் கொண்டுவரப் போர்த்துக்கேயரைக் கடவுள் உபகரணமாக்கினார். போர்த்துக்கேயப் படைகளின் பின்னே வந்த பிரான்சிஸ்கன், யேசுசபை, சாமிநாதர் சபை, அகுஸ்தீன் சபை துறவிகள் இலங்கையில் விசுவாசத்தை விதைத்தனர். அதுவும் வளர்ந்தது.

### யோசேவ்வாசின் குடும்பப் பின்னணி...

இந்நிலையில் கோவா மாநிலத்தின் சல்செத்தே (Salcete) என்னுமிடத்தில் அமைந்துள்ள, சுவாரி (Zuari) நதியின் தெற்குக் கரையோரமாய் சன்னோலே (Sancole) என்னும் கிராமம் அமைந்துள்ளது. 17ஆம் நூற்றாண்டின் நடுக்..... கத்தோலிக்க பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்கும் பாரம்பரிய, ஏழையான பண்புகளைக் கொண்ட கொங்கொணி மொழி பேசும் குடும்பம் ஒன்று வாழ்ந்து வந்தது. இக்கிறிஸ்தவக் குடும்பம் பக்தியிலும், நேர்மையிலும், பிறர் அன்பின் சேவையிலும் சிறந்து விளங்கியது. இதனால் இக்குடும்பத்தைச் சூழ்ந்து வாழ்ந்த ஏனைய குடும்பங்களின் நன்மதிப்பை பெற்றிருந்தது. இது ஒரு பிராமணக் குடும்பமாகவிருந்தாலும் "வாஸ்" (Vass) என்ற போர்த்துக்கேயர் கிறிஸ்தவப் பெயரைக் தனது குடும்பக் பெயராகக் கொண்டிருந்தது.

உறுதியான விசுவாசத்தைக் கொண்டிருந்த மத்திய வயதுடைய கிறிஸ்தோப்பர் வாஸ் என்பவரே இக்குடும்பத்தின் தலைவர். சாதாரண வசதிகளைக் கொண்ட தனது பரம்பரை வீட்டிலே அவர் வாழ்ந்து வந்தார். விவசாயப் பரம்பரையிலே வந்த இவர், ஒரு தனித்துவமான விவசாயியாகவும், சிக்கனத்தைப் கடைப்பிடிப்பவராகவும், எதையும் ஆழ்ந்து சிந்தித்து செயற்படுத்துபவராகவும் இருந்தார். இவர் கல்வி அறிவிலும் சிறந்து விளங்கினார். கிறிஸ்தோப்பர் வாஸ் மராட்டி மொழியின் கிளை மொழியாயும், கொங்கொணி பிராமணர்களின் தாய்மொழியாயும் விளங்கிய கொங்கொணி மொழியில்

## யோசேவ்வா
## அடி
## சமர்ப்ப

பாரத நாட்டிலிருந்து
பண்புடன் (
யோசேவ்வாஸ்
பாழடைந்து போகு
பார் புகழச் செய்

நன்றியுடன் உ
நலமுடனே சமர்ப்பிக்க
நன்றிகளையும் கே
நமதாண்டவர் உமக்கு

போர்த்துக்கேயர் கட்டி
போகட்டும் நமக்கெ
போற்றிக் காத்திட ம
போர்க்கொடி காட்

வல்லவராம் இறைவ
வானுயரச் செய்திடு
வழிகாட்டியாக உ
வரங்கள் பல அ

இலங்கை வாழ் ம
இன்முகத்துடன் நன்றி
இறைவனை நிதமும்
முத்திபேறு பட்டம் பெ

ஆக்கம் : திருமதி. அ
பதுளை

# செய்தி

## ...து அனைத்து



## ...வாழ்த்துக்கள்

... பாடசாலைக் கல்வியை ...லேயே கற்றார். ஏனெனில் ...கய மொழி கோவா மாநிலத்தின் ...க்களின் பேச்சு மொழியாகவும் ... விசுவாசத்தையும், கிறிஸ்தவ ... ஊடகமாகவும் விளங்கியது. ...ாஸின் மனைவியின் பெயர் ...வர் பெனோலிம் (Benaulim) ...ச் சேர்ந்தவர். கிறிஸ்தோப்பர் ...வே, மரிய டொ மிராண்டா ...தோலிக்க மறை உணர்வும் அவர்களுக்கு பேத்றோ என்ற ...ா என்ற பெண் பிள்ளையும் ...ல் குடும்பத்துக்கும் நாட்டுக்கும் ... குழந்தையாகவும், இந்திய ...க திருச்சபை வரலாற்றில் ...ாகவும், தலைமுறை தோறும் ...கருவாக விளங்குபவராகவும், ...ன் சிறந்த கொடையாகவும், ...ம்பத்தின் மூன்றாவது பிள்ளை-

...ம் பணியும் தொடரும்... ➲

## ...வாஸ் ...டிகளாருக்கு ...ப்பணம்

...ந்து - எம் நாட்டை
...ன் நோக்கிய
...ாஸ் அடிகளாரே
...ாகும் எம் மறையை
...சய்து காத்திட்டீரே

... உம் சேவைக்கு
...பிக்கின்றோம் - கோடி
... கோடி மலர்களாய்
...கு வெகுமதி தந்திடுவார்

...ட்டிக்காத்த மறைதனை
...கென்ன என இராது
... மாறுவேடம் பூண்டு
...காட்டி காத்திட்டீரே

...றவன் நின் பணியை
...திடுவார் - நிச்சயம்
... உம்மை அனுப்பி
...ல அளித்திடுவார்

... மக்கள் எந்நாளும்
...ன்றிதனை கூறுவார்கள்
...ம் வேண்டி - உமக்கு
... பெற உதவிடுவார்கள்

**... அன்னம்மா சகாயம்**
**...ள பங்கு**

# லூர்து அன்னை திருத்தலத்திற்கு

# கொழும்பு உயர் மறைமாவட்ட திருயாத்திரை
















**பிரான்சிலுள்ள லூர்து அன்னை திருயாத்திரை கொழும்பு உயர் மறைமாவட்டத்தினால் புரட்டாதி மாதம் 21-28 திகதி ஒழுங்கு செய்யப்பட்டது. இத்திருயாத்திரையின் போது இலங்கையின் பல பாகங்களிலிருந்தும், ஐரோப்பாவிலிருந்தும் பெரும் திரளான மக்கள் நடைபெற்ற வழிபாடுகளில் பங்குபற்றியிருந்தனர். இவற்றில் சில நிகழ்வுகள் உங்கள் பார்வைக்கு!**




**அன்பின் சிறார்களே!**

சிறுவர் பக்கத்தில் நீங்கள் பத்துக் கற்பனைகளைப் பற்றி அறிந்து வருகிறீர்கள். நாம் ஆறாவது கற்பனை பற்றி அறிந்துகொண்டோம். இப்போது ஏழாவது கற்பனை என்ன சொல்கின்றது என தெரிந்து கொள்வோம்.

ஒரு வீட்டிற்குள் அடுத்த வீட்டுச் சிறுவன் தினமும் சென்று கோழி முட்டையைத் திருடினான். அவ்வீட்டார் அச்சிறுவனின் அப்பாவிடம் சிறுவன் கோழி முட்டையைத் திருடுவதைத் தெரிவித்தனர். அப்பா அவர்களிடம் "இனிமேல் என் மகன் உங்கள் வீடு புகுந்து கோழி முட்டையைத் திருடமாட்டான்" என்று உறுதிமொழி அளித்தார். அடுத்த நாளிலிருந்து சிறுவன் கோழி முட்டையைத் திருடவில்லை. ஏனெனில் அவன் அப்பா அந்தக் கோழியையே திருடிவிட்டார். முள்ளை முள்ளால் எடுப்பதுபோல, திருட்டைத் திருட்டாலே அழித்துவிட்டார். மகன் முட்டையைத் திருடினான். அப்பா கோழியைத் திருடிவிட்டார். என்ன பொருத்தம் அவர்களுக்குள் இந்தப் பொருத்தம்.

### "களவு செய்யாதிருப்பாயாக" (வி.ப 20:15)

ஏழாவது கற்பனை எமக்கு விடுக்கும் அழைப்பு. பிறருக்குரிய பொருளை களவாக எடுப்பது பிழையான செயல். விருப்பங்கள் பல வகைப்படும். எனவே விருப்பங்கள் தன்னிலே பிழையானது அல்ல, ஆனால் அவ்விருப்பம் ஓர் எல்லையைக் கடந்து ஒரு பொருளை விரும்பியதற்காக அது பிறருடையதாக இருந்தும் அதனை பிழையான வழியில் கவர்ந்து எடுத்தல் பிழையானது ஆகும்.

மனிதன் தனது கடின உழைப்பின் மூலம் பெற்றுக் கொள்ளும் பொருட்களையும், தந்தை வழி, பிறர் எமக்குத்தரும் அன்பளிப்பு பொருட்களையும் சொந்தமாக வைத்திருக்க அனைவருக்கும் உரிமை உண்டு

### ஏழாம் கற்பனைக்கு மாறான எமது செயல்கள்

- ஒருவருடைய விருப்பம் இல்லாமல் பொருட்களை அபகரித்தல்.
- பிறருடைய அனுமதியின்றி, விருப்பமின்றி அவர் சொத்தை எடுத்தல் அல்லது அநீதி முறையில் பயன்படுத்தல்.
- முதலாளித்தவம் காரணமாக மனிதர்களை அடிமைகளாகப் பயன்படுத்தல்.
- உலகின் வளங்களை அளவுக்கதிகமாகப் பயன்படுத்தல் அதேவேளை ஒரு பகுதி மக்கள் வறுமையில் வாடுதல்.

பிறருக்குரியது எதுவென்றாலும் அதனை அவருக்கே கொடுக்க வேண்டும். அதனை களவாடுதலும் அதன்மேல் ஆசை கொள்வதும் பாவம் ஆகும்.

**வினாக்கள்**

1. ஏழாம் கற்பனை எமக்கு கற்றுத் தரும் படிப்பினைகள் என்ன?
2. ஏழாவது கற்பனைக்கெதிரான பாவச் செயல்கள் எவை?

(இவ்வினாக்களுக்கு விடையை எழுதி அனுப்புங்கள்)

**ஆக்கம் : ஃபிறிஜுடியா ஸ்ரனிஸ்லோஸ்**
**கிளரேஷியன் அருட்சகோதரி**

## கல்வியைக் குறிக்கும் பழமொழிகள்

1. கல்மேல் எழுதிய எழுத்து அழியாது.
2. கல்வி கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு.
3. கல்வி என்ற பயிருக்கு தண்ணீர் என்ற மழை வேண்டும்.
4. கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலக அளவு
5. படிப்பது தேவாரம் இடிப்பது பெருமாள் கோவில்.
6. இளமையில் கல்வி முதுமையில் தெரியும்.
7. எண்ணும் எழுத்தும் கண்ணெணத் தகும்.

**ஆக்கம் : L. ஜெயசீலி லோறன்ஸ், கொழும்பு – 12**

குட்டீஸ்! உங்களது கிறிஸ்மஸ் பெருவிழாவை ஞான ஒளியுடன் கொண்டாட விரும்புகின்றீர்களா? அப்படியானால் கிறிஸ்மஸ் பற்றிய சுவையான தகவல்கள், ஆக்கங்கள், வரைந்தல், போன்றவற்றை உங்களது புகைப்படத்துடன் கார்த்திகை மாத இறுதிக்குள் எமக்கு அனுப்பி வையுங்கள். எமக்கு அனுப்ப வேண்டிய முகவரி

ஆசிரியர், ஞான ஒளி,
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை,
கொழும்பு - 08.

## காகமும் நாய்க்குட்டியும்

"மனிதர்கள் மற்றப் பறவைகளை அன்புடன் வளர்க்கின்றார்கள். அவைகளின் செயல்களைப் பாராட்டுகின்றார்கள். ஆனால் என்னை வெறுத்து கல்லால் எறிந்து துரத்துகின்றார்களே ஏன்?"



ஒரு வீட்டில் நாய்க்குட்டியொன்றை எடுத்து வளர்த்து வந்தார்கள். அந்த நாய்க் குட்டி காகத்துடன் நட்பாக இருந்தது. ஒரு நாள் காகம் மிகவும் கவலையுடன் அமர்ந்திருந்தது. இதைக் கண்ட நாய்க் குட்டி காகத்திடம் சென்று "என்ன காக்கையாரே! ஏன் ஒன்றும் பேசாமல் வருத்தமாக இருக்கின்றீர்?" என்று கேட்டது.

அதற்குக் காகம் "மனிதர்கள் மற்றப் பறவைகளை அன்புடன் வளர்க்கின்றார்கள். அவைகளின் செயல்களைப் பாராட்டுகின்றார்கள். ஆனால் என்னை வெறுத்து கல்லால் எறிந்து துரத்துகின்றார்களே ஏன்?" என்று கேட்டது.

"இதற்குக் காரணம் உங்கள் தீய குணங்கள் தான். இதை நீங்கள் இல்லாது செய்தால் உங்களையும் அன்பாக நடத்துவார்கள்" என்றது நாய்க்குட்டி. "எங்களிடம் அப்படியென்ன தீய குணங்கள் உள்ளன? கடமை, சுத்தம் இப்படி பல நல்ல குணங்களில் நாங்கள் தான் சிறந்தவர்கள்!" என்று சொன்னது காகம்.

"உண்மைதான்" என்றது நாய்க்குட்டி. "பகிர்ந்துண்ணும் பண்பைக் கற்றுத்தந்ததும் நாங்கள்தான்" என்று பெருமையோடு சொன்னது காகம். "ஆமாம் அதுவும் உண்மைதான்!" என்று மறுபடியும் சொன்னது நாய்க்குட்டி.

"இப்படி நல்ல குணங்கள் எம்மிடம் இருந்தும், மற்றப் பறவைகளுக்கு உள்ள மதிப்பு எங்களுக்கு இல்லையே ஏன்? குயில் கூவும்போது அதன் இனிமையை ரசிக்கிறார்கள். மயிலாடும்போது அதை இரசித்துப் பாராட்டுகிறார்கள். கிளியை வீட்டில் வளர்த்துப் பேசக் கற்றுக் கொடுக்கிறார்கள். ஆனால் எவ்வளவோ நல்ல குணங்கள் இருந்தும் எம்மினத்தைக் கண்டாலே துரத்துகிறார்களே ஏன்?" என்று மீண்டும் கேட்டது காகம்.

"ஏன் என்று நான் சொல்லுகின்றேன். உங்களிடம் எவ்வளவு நல்ல குணங்கள் இருந்தாலும், உங்களிடம் இருக்கும் சில தீய குணங்களால் தான் மனிதர்கள் உங்களை வெறுக்கிறார்கள்". என்று கூறியது நாய்க்குட்டி. "அப்படி என்ன தீய குணங்கள்?"என்று கேட்டது காகம். "திருடுதல், ஏமாற்றுதல்" என்று சொன்னது நாய்க்குட்டி. காகம் தலை குனிந்தது.

**ஒருவரிடம் எவ்வளவு நல்ல பண்புகள் இருந்தாலும் அவரின் ஒரு சிறு தீச்செயல் அவரை, அவரின் அத்தனை நல்ல பண்புகளில் இருந்தும் மறைத்து அந்தச் தீயசெயலே முன்னிற்கும். எனவே சிறுவர்களே உங்கள் தீச்செயலிலிருந்து விலகி நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்ளுங்கள்.**

## இறைத்திட்டம்



ஆண்டவர் இயேசு தோமையாரிடம் "நான் உன்னை எங்கு அனுப்புகிறேனோ, அங்கு செல்லத் தயாரா?" எனக்கேட்க, "நான் எங்கு வேண்டுமானாலும் செல்கிறேன். இந்தியாவைத் தவிர" என்றார் தோமையார்.

"நான் உன்னை இந்தியாவுக்குத்தான் அனுப்ப நினைத்திருக்கிறேன். நீ இந்தியாவின் புனிதராக வேண்டுமென்பதே எனது திட்டம்" என்று இயேசு சொன்னார். இறைவனின் திட்டப்படி நடந்து நாமிருக்கும் இடத்திலேயே புனிதராகலாம்.

**புனித தோமையாரின் வாழ்க்கை சரித்திர நிகழ்ச்சி**

## யார் இவர்?

- இவர் கி.பி 295 முதல் 373 வரை வாழ்ந்தவர்.
- இளவயதிலேயே அளவற்ற அறிவுத் திறன் கொண்டவர்.
- ஆன்மீகத்தில் சிறந்தவராக விளங்கி "தீயாக்கோன்" பட்டம் பெற்றவர்.
- திருச்சபையில் அரசியல் போன்ற பல காரணங்களுக்காய் ஐந்து முறை நாடு கடத்தப்பட்டு 17 ஆண்டுகள் அகதியாக வாழ்ந்து வந்தார்.
- இறுதிவரை கிறிஸ்துவின் தெய்வத் தன்மையை நிலைநாட்டியவர்.
- இவர் ஆயராகி 50 ஆண்டுகள் கிறிஸ்துவுக்காக பல இன்னல்களை தாங்கிக் கொண்டு இறுதியில் மரித்தவர்.

**விடை : புனித அத்தனாசியார்**

## உலகின் பெரும் பாலைவனங்கள்

1. ***சஹாரா*** : வட ஆப்பிரிக்கா, 9.0 மில்லியன் சதுர கிலோ மீற்றர்
2. ***ஆஸ்திரேலியா*** : ஆஸ்திரேலியா, 3.8 மில்லியன் சதுரகிலோ மீற்றர்
3. ***அராபியாப் பாலைவனம்*** : தென் மேற்கு ஆசியா, 1.3 மில்லியன் சதுர கிலோ மீற்றர்
4. ***தக்லா மகான்*** : சீனா, 1.245 மில்லியன் சதுர கிலோ மீற்றர்
5. ***கோபி*** : மத்திய ஆசியா, 1.04 மில்லியன் சதுர கிலோ மீற்றர்
6. ***கலஹாரி*** : தென் ஆப்பிரிக்கா, 520,000 சதுர கிலோ மீற்றர்
7. ***தர்கஸ்தான்*** : மத்திய ஆசியா, 450,000 சதுர கிலோ மீற்றர்
8. ***நிமீப்*** : தென் மேற்கு ஆப்பிரிக்கா, 310,000 சதுர கிலோ மீற்றர்
9. ***சோமாலி*** : சோமாலியா, 310,000 சதுர கிலோ மீற்றர்
10. ***சோனோரன்*** : ஐக்கிய நாடுகள் - மெக்சிகோ, 260,000 சதுர கிலோ மீற்றர்
11. ***தார்*** : இந்தியா - பாகிஸ்தான், 260,000 சதுர கிலோ மீற்றர்

**ஆக்கம் : P. ஷைனி, கொழும்பு 13.**



ஆக்கம் : சாலிகா, தரம் - 3, புதுக்கடைப் பங்கு

ஆக்கம் : B. ஜசாந்தன், தரம் - 7
புதுக்கடைப் பங்கு






# இயேசுவின் அன்பு

அனைத்துக் கொள்வது இயேசுவின் அன்பு
ஆறுதல் அளிப்பது இயேசுவின் அன்பு
இன்பம் தருவது இயேசுவின் அன்பு
துன்பம் துடைப்பது இயேசுவின் அன்பு

உறவின் பாலமே இயேசுவின் அன்பு
உலகின் ஆரம்பமே இயேசுவின் அன்பு
வற்றாத நீரூற்றே இயேசுவின் அன்பு
என்றும் அணையாத ஒளியே
இயேசுவின் அன்பு

கருணையின் வடிவமே இயேசுவின் அன்பு
கள்ளங் கபடற்றது இயேசுவின் அன்பு
பரிவு நிறைந்தது இயேசுவின் அன்பு
எம் பாவம் போக்கியதும் இயேசுவின் அன்பு

கல்வாரிப் பலியே இயேசுவின் அன்பு
எமை கண்மணிப்போல் காப்பதும்
இயேசுவின் அன்பு
தூய்மையான இரத்தமே இயேசுவின் அன்பு
தாய்மையின் இதயமே இயேசுவின் அன்பு

மகிழ்வைத் தருவது இயேசுவின் அன்பு
மனமாற்றம் அளிப்பது இயேசுவின் அன்பு
மாற்றம் பெறாதது இயேசுவின் அன்பு
மாற்றவும் முடியாதது இயேசுவின் அன்பு

வறுமையை ஒழித்தது இயேசுவின் அன்பு
வாழ்வை அளித்தது இயேசுவின் அன்பு
எண்ணில்லா அற்புதம் இயேசுவின் அன்பு
எம் அயலானில் காண்போம்
இயேசுவின் அன்பு

ஆக்கம் : P.M. மேரி பெனடிக்கா
பென்ரித், அவிசாவளை

# பட்டப் பெயர்கள்

ஒவ்வொரு நாட்டின் சில பகுதிகளுக்கோ அல்லது அந்நாட்டின் சில பகுதிகளின் சிறப்பியல்பையொட்டியோ,அதற்கு சில பட்டப் பெயர்கள் உண்டு. அவைகளில் சில:

- ✷ பசிபிக்கின் மகாபிரிட்டன் : **ஜப்பான்**
- ✷ நைல் நதியின் நன்கொடை : **எகிப்து**
- ✷ இந்துமகா சமுத்திரத்தின் ஜிப்ரால்டர் : **ஏடன்**
- ✷ கண்ணீர் வாயில் : **பாபேல் மெண்டபிள் வளைகுடா**
- ✷ உலகின் கூரை : **திபெத்**
- ✷ என்றும் நிலைத்துள்ள நகரம் : **உரோம்**
- ✷ எமரால்ட் தீவு : **அயர்லாந்து**
- ✷ இருண்ட கண்டம் : **ஆப்பிரிக்கா**
- ✷ ஏழு குன்றுகள் நகரம் : **உரோம்**
- ✷ மோட்டர் கார்களின் நகரம் : **டெப்ராய்ட்**
- ✷ நீலமலை : **நீலகிரி**
- ✷ மலைகளின் இளவரசி : **கொடைக்கானல்**
- ✷ ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் : **சுவிட்சலாந்து**
- ✷ முத்துத் தீவு : **பஹ்ரைன்**

# இவரைத் தெரியுமா?



சிரியா மன்னனின் படைத்தலைவன் நாமான் வலிமை மிக்க போர் வீரன். ஆனால் தொழுநோயாளி. நாமான் வீட்டிற்கு பணிவிடை புரியும் சிறுமி எலிசாவிடம் சென்றால் அவரது நோய் குணமாகும் என்று நாமான் மனைவியிடம் கூறினாள். சிரியா அரசன் கொடுத்த ஏறத்தாழ நாநூறு கிலோ வெள்ளி, ஆறாயிரம் பொற்காசு, பத்து பட்டாடைகளை எடுத்துக் கொண்டு நாமான் எலிசாவின் வீட்டு வாசல் முன் வந்து நின்றான். எலிசா அவரிடம் “நீ போய் ஏழுமுறை யோர்தானில் மூழ்கினால் குணமடைவாய்” என்றார். நாமான் சினமுற்று வெளியேறினார். அவன் எலிசா அவர் உடல் மீது கையை வைத்து குணமாக்குவார் எனவும், தன் நாட்டிலுள்ள ஆறுகளில் மூழ்கி எழச் சொல்வார் எனவும் எதிர்பார்த்தான். பின் நாமான் வேலைக்காரர்கள் சொன்னதன் பேரில் யோர்தானில் ஏழு முறை மூழ்கி ஏழ, அவர் நலமடைந்தார். நாமான் கொடுத்த அன்பளிப்பு எதையும் எலிசா பெற்றுக் கொள்ளவில்லை. இரு கழுதைப் பொதி மண்ணை மட்டும் அங்கிருந்து நாமான் எடுத்துச் சென்றான்.

## நாமான்

# தெரிந்து கொள்ளுங்கள்

1. பொருளாதாரத்தின் தந்தை என அழைக்கப்படுபவர்?
**ஆடம் ஸ்மித்**

2. ஆசியாவில் முதன் முதலாக தொழில்மயமான நாடு?
**ஜப்பான்**

3. ஆசியாவில் கடைசியாக தொழில் மயமான ஐரோப்பிய நாடு?
**ரஷ்யா**

4. காளானில் இருந்து தயாரிக்கப்படும் மருந்து எது?
**பென்சிலின்**

5. லட்சத்தீவில் அதிகம் பேசப்படும் மொழி?
**மலையாளம்**

6. சிவப்பு எறும்பின் கொடுக்கில் அமைந்துள்ள அமிலம்?
**பராமிக் அமிலம்**

7. தாஸ் கேபிடல் என்றும் புத்தகத்தை எழுதியவர்?
**கார்ல் மார்க்ஸ்**

8. வௌவால் ஏற்படுத்தும் ஒலி?
**மீயொலி**

9. மனிதன் ஒரு அரசியல் மிருகம் எனக் கூறியவர்?
**அரிஸ்டாட்டில்**

10. வனவிலங்கு தடுப்புச்சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு?
**கி.பி 1890**

# கத்தோலிக்க திருமறை

## தரம் (11) (க.பொ.த) மாணவர்களுக்கான மாதிரி வினாக்கள்

1. மனிதன் ஏனைய படைப்புக்களின் மத்தியில் மேன்மை வாய்ந்தவனாக இருக்கிறான். ஏனெனில்,
   i. சுதந்திர மனப்பாங்கும், மனச்சான்றும் உடையவனாக இருப்பதால்
   ii. இறைவனின் உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்டவனாக இருப்பதால்
   iii. படைப்புக்களின் மீது உரிமையும், பொறுப்பும் உடையவனாக இருப்பதால்
   iv. உடலும், மனச்சான்றும், புத்திக்கூர்மையும் உடையவனாக இருப்பதால்

2. செங்கடலைக் கடந்த நிகழ்ச்சி வெளிப்படுத்துவது
   i. எகிப்திய மக்கள் வாக்குப்பண்ணப்பட்ட பூமிக்குப் பயணம் செய்தமையாகும்.
   ii. பார்வோன் மன்னனின் படைகள் செங்கடலைக் கடந்தமையாகும்.
   iii. இஸ்ரயேல் மக்கள் ஒரே இறைவனை வழிபடுதலையாகும்.
   iv. தீமையின் அடிமைத் தனத்திலிருந்து உண்மைச் சுதந்திரத்தை நோக்கிச் சென்றமையாகும்.

3. திருச்சபையைக் கிறிஸ்துவின் மறை உடல் என அறிமுகம் செய்பவர்.
   i. தூய யோவான் ii. தூய யாக்கோபு
   iii. தூய பவுல் iv. தூய பேதுரு

4. பழைய உடன்படிக்கையின் இறைவெளிப்பாட்டில் முக்கிய பங்கு வகித்த இருபிரிவினர்.
   i. குலமுதுவர்கள் - இறைவாக்கினர்
   ii. அரசர்கள் - குருக்கள்
   iii. இறைவாக்கினர் - அரசர்கள்
   iv. நீதிபதிகள் - குலமுதுவர்கள்

5. மூவேளைச் செபத்தின் மூலம் நாம் நினைவு கூருவது,
   i. இயேசுவின் பகிரங்க வாழ்வை
   ii. இயேசுவின் மனித அவதாரத்தை
   iii. இயேசுவின் விண்ணேற்பை
   iv. இயேசுவின் சிலுவைப் பலியை

6. இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பைக் குறிக்கும் சொல்
   i. மூவொரு இறைவனின் மறைபொருளை
   ii. துக்க தேவ இரகசியம்
   iii. பாஸ்கா மறைபொருள்
   iv. மீட்பின் மறைபொருள்

7. அன்றாட வாழ்வில் நாம் முகம்கொடுக்க நேரும் துன்ப துயரங்கள்,
   i. இறைவனின் தண்டனையாகும்
   ii. இறைவனின் செய்தியாகும்
   iii. பாவத்தின் விளைவாகும்
   iv. சென்ம பாவத்தின் பிரதிபலனாகும்

8. கிறிஸ்தவராக வாழ்வை ஆரம்பிப்பதற்குத் தேவையான அருளடையாளங்களாவன.
   i. திருமுழுக்கு, நற்கருணை, நோயில்பூசுதல்
   ii. நற்கருணை, உறுதிப்பூசுதல், மெய்விவாகம்
   iii. திருமுழுக்கு, நற்கருணை, உறுதிப்பூசுதல்
   iv. உறுதிப்பூசுதல், நற்கருணை, குருத்துவம்

9. சரியானதைத் தேர்ந்து கொள்ளவும் தீமையை விலக்கவும் நமக்கு மிகவும் உதவுவது.
   i. பெரியோர் அறிவுரை ii. மனித அறிவு
   iii. சுதந்திர மனப்பாங்கு iv. மனச்சான்று

10. திருவழிபாட்டின் குறிக்கோள் ஆக இருப்பது
   i. இறை - மனித உறவை வளர்த்துக் கொள்ளுதல்
   ii. கிறிஸ்தவ சடங்கு முறைகளை முன்னெடுத்துச் செல்லுதல்
   iii. மக்களைப் பக்தி முயற்சிகளில் பயிற்றுவித்தல்
   iv. இறைமக்களைச் சகோதரத்துவத்தில் இணைத்தல்

11. தமக்கு உரியதைப் பெற உரிமை கோரவும், பிறருக்கு உரியதைப் பெற்றுக் கொடுக்கவும் நம்மை வழிநடத்தும் ஓர் பண்பு.
   i. சமத்துவம் ii. பிறர் அன்பு
   iii. நீதி iv. ஒத்துழைப்பு வழங்குதல்

12. “ஒருவர் தண்ணீரினாலும்........... பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று உறுதியாக உமக்குச் சொல்லுகிறேன்” இடைவெளிக்குப் பொருத்தமான விடை
   i. தீயினாலும் ii. திருமுழுக்கினாலும்
   iii. உண்மையினாலும் iv. தூய ஆவியினாலும்

13. தற்கால உலகில் வாழும் மனிதனின் கடமை,
   i. வாழ்க்கைக்குத் தேவையான உற்பத்தியை மட்டும் தெரிந்துகொள்ளுதல்
   ii. இயற்கையில் ஏற்படும் மாற்றங்கள் பற்றி விழிப்பாயிருத்தல்
   iii. புதிய உற்பத்திகள் மூலம் படைப்பைப் புனிதமாக முன்னெடுத்துச் செல்லுதல்
   iv. நவீன தொழில் நுட்பத்தை மற்றவருக்கு இடையூறு விளைவிக்காத வகையில் பயன்படுத்துதல்.

14. “இவரே என் மைந்தர், நான் தேர்ந்து கொண்டவர் இவரே. இவருக்குச் செவிசாயுங்கள்” இவ்வார்த்தைகளுடன் தொடர்புடைய நிகழ்ச்சி
   i. இயேசுவின் உயிர்ப்பு
   ii. இயேசுவின் திருமுழுக்கு
   iii. இயேசு பாலை நிலத்தில் செபித்தல்
   iv. இயேசு தோற்றம் மாறுதல்

15. ஒப்புரவு அருளடையாளத்தின் மூலம் நமது வாழ்வில் முழுமையான மாற்றத்தை உருவாக்கிக் கொள்ளத் தேவையானது.
   i. பாவங்கள் அனைத்தையும் வெளிப்படுத்துதல்
   ii. உள்ளார்ந்த மனமாற்றம்
   iii. தண்டனையை நிறைவேற்றுதல்
   iv. பாவங்களுக்காக மனம் வருந்துதல்

16. “பயணத்திற்குக் கைத்தடி, பை, உணவு, பணம் போன்ற எதையும் எடுத்துக் கொண்டு போகவேண்டாம். ஓர் அங்கிபோதும்” இவ் அறிவுரையைப் பின்பற்ற வேண்டியவர்கள்.
   i. மறைபரப்புப் பணியில் ஈடுபட்டுள்ளோர்
   ii. ஏழைகளுக்குப் பணிபுரிவோர்
   iii. விண்ணுலகை எதிர்பார்த்திருப்போர்
   iv. ஏழையரின் உள்ளத்தோர்.

17. இன்று உலகெங்கும் இடம்பெறும் அழிவுச் செயல்களுக்குக் காரணம்
   i. தன்னைப் பற்றி எப்பொழுதும் சரியென நினைத்தல்
   ii. எல்லையின்றி செல்வத்திற்கும், அதிகாரத்திற்கும் அடிமையாகுதல்
   iii. மனிதன் இறைவனின் திட்டத்திற்கு மாறாகச் செயற்படுதல்
   iv. நவீன, விஞ்ஞான தொழில் நுட்ப அறிவிற்கு முதலிடம் கொடுத்தல்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



# சாவு வந்தே தீரும்„ இது உண்மை

திருத்தந்தையான ஆறாம் சின்னப்பர் தாம் இறப்பதற்கு சில நாட்களுக்கு முன் நடத்திய மறையுரையில் கத்தோலிக்க கிறிஸ்தவர்களிடம் இவ்வாறு கூறினார். "சாவைக் குறித்தும், அதன்பின் நிகழவிருக்கும் காரியங்களைக் குறித்தும் நான் சிந்திக்கிறேன். இம்மறைபொருளை கிறிஸ்துவின் ஒளியால்தான் அறிந்து கொள்ள இயலும். அதனால் முடிவுறும் இவ்வுலக வாழ்வை எனக்கு வழங்கியதற்காக நான் இறைவனைப் போற்றித் துதிக்கிறேன்" திருத்தந்தை கூறிய இவ்வார்த்தைகளை ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் இதயத்தில் பதித்துக் கொள்ள வேண்டும்.

சாவு என்று கேட்டாலே அஞ்சுபவர் பலர். சாவு என்று சொல்லவில்லையென்றாலும் அதைப் பற்றிய எண்ணம் கூட அச்சந் தருவதாக உள்ளது. சிலர் சாவை எதிர்நோக்கியிருக்கின்றனர். ஆனால் சாவு அவர்களிடம் செல்வதில்லை. வேறு சிலர் தொலைநோக்குப் பார்வையோடு திட்டங்களைத் தீட்டுகின்றனர். ஆனால் அகால மரணத்தால் உலகை விட்டு செல்கின்றனர். (லூக் 12:19-20) சாவு நினையாத நேரத்தில் வரும். (லூக் 12:40) நம்மை விட்டுப் பிரிந்து சென்றவர்கள் நம்மை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். நாமும் இறந்து அங்கு செல்வோம். நமக்குப் பிரியமானவர்களை நாம் அங்கு சந்திப்போம். இவ்வாறு நாம் நம்புகிறோம். ஆனால் நாம் மீண்டும் சந்திக்கும்போது நமக்குப் பிரியமானவர்களை நம்மால் அடையாளம் கண்டு கொள்ள முடியுமா? அது புரியாத புதிராகவே உள்ளது! இனி அவர்கள் சாகமுடியாது. அவர்கள் வானதூதரைப் போல் இருப்பார்கள். உயிர்த்தெழுந்த மக்களாய் இருப்பதால் அவர்கள் கடவுளின் மக்களே (லூக் 20:36)

இறைவன் நம்மை இவ்வுலகிற்கு அனுப்பி வைத்தது அவரது திட்டங்களை நிறைவேற்றுவதற்காகத்தான். எனவே இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றி அவரிடம் திரும்பிச் செல்ல நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும். (லூக் 21:34-36) இறைவனிடம் திரும்பிச் செல்வதுதான் சாவு. சாவிலிருந்து எவராலும் தப்ப இயலாது. ஆம் சாவு வந்தே தீரும்!

சாவு நமது புதுவாழ்வுக்கான தொடக்கமாகும். அதனால் சாவை நாம் அச்சத்தோடு காணக்கூடாது. மாறாக மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். நமது இவ்வுலக வாழ்வு மிக மிகக் குறுகியது. அது சட்டென தீர்ந்து விடும். அதனால் நமது வாழ்வில் நற்செயல்களால் நாம் செல்வராக வேண்டும். இயேசுவின் சாவோடு நமது சாவையும் சேர்ந்தால் சாவு நட்டமல்ல, இலாபமாகவே இருக்கும்.

உண்மைக் கிறிஸ்தவர்கள் சாவில் மகிழ்வர். ஏனென்றால் கிறிஸ்து சாவை வென்றவர். அவர் உயிர்த்தெழுந்தவர். கிறிஸ்துவின் உயிர்ப்புத்தான் நமது உயிர்ப்புக்கான அடிப்படை (1கொரி 15:13-14) நமது நற்செயல்களுக்குப் பரிசு கிடைக்க நாம் சாக வேண்டியது அவசியம். அதனால் தான் திருத்தூதர் பவுல் பின்வருமாறு அறிவுறுத்துகின்றார். இயேசு இறந்து உயிர்த்தெழுந்தார் என நாம் நம்புகின்றோம். அப்படியானால், இயேசுவோடு இணைந்த நிலையில் இறந்தோரைக் கடவுள் அவருடன் அழைத்து வருவார் (1தெச 4:14)

தாய் வயிற்றில் வளரும் குழந்தை, ஆகா! இது எவ்வளவு அருமையான இடம்! நான் இங்குதான் இருப்பேன் என்று நினைக்கலாம். ஆனால் உரிய காலத்தில் அது வெளியேறத்தான் வேண்டும். அதைப் போன்றது தான் சாவும். சாவு நம்மை வேறு உலகில் பிறக்க வைக்கிறது. அங்கே என்ன நிகழுமோ என்று கருவைப்போல் நாம் அஞ்சுகிறோம். கருப்பையில் வளரும் குழந்தையைக் காண அதன் பெற்றோர் ஆவலோடு காத்திருக்கின்றனர். அதைப்போல் நமது ஆண்டவர் நமக்காகக் காத்திருக்கின்றார். நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்தபின் திரும்பி வந்து உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன் (யோவா 14:3)

கிறிஸ்துவின் வார்த்தைகள் எவ்வளவோ ஆறுதலாக அமைபவை. நம்மை நிலைவாழ்வுக்குச் சேர்ப்பதுதானே சாவு? ஏன் அதைக் கண்டு அஞ்ச வேண்டும்? சாவு நம்மை அழைக்கும் போது தைரியமாக, சந்தோஷமாகப் போகவேண்டும்.

வேற்று நாட்டுக்குச் சென்று அங்குள்ள தீய சக்திகளை ஒழித்து சொந்த நாட்டுக்குத் திரும்பும் இளவரசனுக்கு முடி சூட்டி மகிழ அரசர் காத்திருப்பதுபோல ஒவ்வொரு கிறிஸ்தவனுக்காகவும் கடவுள் காத்திருக்கின்றார். அதனால்தான் திருத்தூதரான பவுல் பின்வருமாறு கூறுகின்றார். இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே. அதை இறுதி நாளில் ஆண்டவர் எனக்குத் தருவார். நீதியான அந்த நடுவர் எனக்கு மட்டுமல்ல, அவர் தோன்றுவார் என விரும்பிக் காத்திருக்கும் அனைவருக்குமே தருவார் (2 திமொ 4:7-8)

சிலுவையில் அறையப்பட்டு இறக்கும் வேளையில் ஆண்டவர் இயேசு, எல்லாம் நிறைவேறிற்று என்றார். (யோவா 19:30) நம்மாலும் அவ்வாறு சொல்ல இயலவேண்டும். அப்படிச் சொல்லி அமைதியாய் இறக்க இன்று முதல் நாம் நமது வாழ்க்கையை ஒழுங்குபடுத்த வேண்டும். சோதனைகளைப் பொறுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். மனிதன் ஒரு பிடி மண்ணில் அடங்குவான். நிலையாமை தான் இவ்வுலக வாழ்வு. காயமே இது பொய்யடா, வெறும் காற்றடித்த பையடா என்றான் கவிஞன். நிலையாமைப் புரிந்து கொள்வோம். அழியாமையைப் பற்றிக் கொள்ளும் வண்ணம் நற்செயல் புரிவோம். மனிதரின் வாழ்நாள் புல்லைப் போன்றது. வயல்வெளிப் பூவென அவர்கள் மலர்கின்றார்கள். அதன் மீது காற்றடித்தும் அது இல்லாமல் போகின்றது. அது இருந்த இடமே தெரியாமல் போகின்றது. (தி. பா 103:15-16) எனவே நாம் ஆன்ம மீட்பைப் பற்றிச் சிந்திப்போம். சாவை மகிழ்ச்சியோடு எதிர்கொள்ள ஆயத்த நிலையில் இருப்போம்.

**நன்றி ஐசக் சாஹா [வசனோல்சவம்]**

# வலுவான எலும்புகளுக்கு...!



ஆரோக்கியமான உடலுக்கு ஆதாரமாக இருப்பவை எலும்புகள். எலும்புகள் பலம் குறைவதால் பல்வேறு நோய்கள் தொற்றிக் கொள்ளும். கல்சியச் சத்து அதிகம் உள்ள பால், கீரைகள் போன்றவற்றை சாப்பிடாமல் இருப்பதால் ஆஸ்டியோபோரோசிஸ் என்ற நோய் தாக்குவதற்கு காரணமாக அமைகிறது. மேலும் விட்டமின் டி குறைபாட்டினாலும், முதுகெலும்பை தாக்கும் இந்த நோய், பின்னர் கை, கால் எலும்புகளையும் பாதிக்கச் செய்கிறது.

பெண்களுக்கு மாதவிலக்கு நிற்கும் காலத்தில் இந்த நோய் ஏற்படுவது வழக்கம். இந்த நோயின் காரணமாக எலும்புகள் போதிய சக்தியில்லாமல் எளிதில் உடையும் நிலையை அடைகின்றன. பல மணிநேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்திருப்பது, போதிய அளவு உடற்பயிற்சி செய்யாதது போன்ற காரணங்களால் இந்தநோய் தற்போது இளைஞர்களைத் தாக்கிவருகிறது. இதற்கான சில ஆரோக்கியமான உணவு பொருட்களை உட்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

## சத்துக்கள் அடங்கிய பேரிச்சம்பழம்

பேரிச்சம்பழத்தில் கல்சியம், மாங்கனீஸ் உள்ளது. அதேபோல் தாவரச் சத்துக்களும், மங்கனீசியமும் காணப்படுகின்றன. இது எலும்புகளை ஆரோக்கியமாக வைத்திருக்கிறது.

## சத்தான காய்கறி, பழங்கள்

முட்டைக்கோஸ், காலிப்பளவர், பீட்ருட், வெண்டைக்காய் போன்ற காய்கறிகளை தினசரி சேர்த்துக்கொள்வதன் மூலம் எலும்புகள் ஆரோக்கியமாக இருக்கும். ஆரஞ்சு, கொய்யா, ஸ்டாபெர்ரி, வாழைப்பழம், ஆப்பிள் போன்றவை எலும்புகளை பாதுகாப்பாக வைத்திருக்கும்.

## கல்சியம் நிறைந்த பால்

சீஸ், யோகர்டு, பன்னீர், ஸ்கிம்டு மில்க் பவுடர், போன்றவற்றில் கல்சியம் காணப்படுகிறது. அவற்றை சாப்பிடலாம். குறைந்த கொழுப்பு சத்துள்ள பால் பொருட்களை சாப்பிட வேண்டும். இதனால் எலும்புகள் பலமடையும்.

## கல்சியம் நிறைந்த ராகி

100 கிராம் ராகியில் 330 மில்லிகிராம் கல்சியச்சத்து உள்ளது. எனவே ராகி சாப்பிடுவதன் மூலம் எலும்புகள் ஆரோக்கியமாக இருக்கும்.

## எலும்பைக் காக்கும் பருப்புக்கள்

சோயா, பீன்ஸ், கொள்ளு போன்றவைகளில் கல்சியம் காணப்படுகின்றன. அதேபோல் ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் கொண்ட மீன் உணவுகளை உட்கொள்ளலாம். பருப்பு, உளுந்து கல்சியச்சத்து நிறைந்தது. இவை எலும்புகளைப் பாதுகாக்கும்.

## விட்டமின் டி சத்து உள்ள சூரிய ஒளி

விட்டமின் டி சத்து நிறைந்த உணவுகளை உட்கொள்வது அவசியம். சூரிய ஒளியில் விட்டமின் டி சத்து உள்ளது. எனவே சூரிய ஒளி படுமாறு நிற்கலாம். எலும்புகளின் வளர்ச்சிக்கும், சருமத்திற்கும் விட்டமின் டி அவசியமாகின்றது.

## தாது உப்புக்கள் நிறைந்த கொட்டைகள்

பாதாம், பிஸ்தா, போன்ற கொட்டைகளில் உடலுக்குத் தேவையான தாது உப்புக்கள் உள்ளன. கல்சியம், மெக்னீசியம், மாங்கனீஸ், பாஸ்பரஸ் போன்றவைகள் காணப்படுகின்றன. இவற்றின் மூலம் எலும்புகள் பாதிப்படையாமல் தப்பிக்கலாம்.

# பற்களை பளிச்சென்றாக்கும் வாழைப்பழத் தோல்...!



அனைவருக்குமே தங்கள் பற்கள் வெண்மையாக பளிச்சென்று இருக்க வேண்டும் என்று தான் ஆசை. இதற்கு எந்தவித இரசாயன பேஸ்டுகளோ தேவையில்லை. வீட்டில் உள்ள பொருட்களைக் கொண்டே மிக எளிமையான முறையில் பளிச்சென்ற பற்களைப் பெறலாம்.

தினமும் இரண்டு முறை வாழைப்பழத்தின் தோலை எடுத்து ஒரு நிமிடம் பற்களை தேய்க்க வேண்டும். இதனால் வாழைப்பழத்தில் உள்ள கனிமங்களான பொட்டாசியம், மாங்கனீசு, மக்னீசியம் போன்றவைகள் பற்களால் உறிஞ்சப்படுகிறது. இவற்றை வீட்டிலேயே சிறந்த முறையில் செய்து முத்துப் போன்ற வெண்மையான பற்களைப் பெறுங்கள். இதேபோன்று ஆரஞ்சு பழத் தோலை காய வைத்து, பொடி செய்து கொள்ளுங்கள், இந்த பொடியால் தினமும் பற்களை தேய்த்து வந்தால் தூய்மையான, வெண்மையான பற்களைப் பெறலாம்.

# புதிய உலகம் காண்போம்



இளையோர் பக்கம்

அங்கம் - 65



என் சிறுமைப் பருவம் முழுவதும் ஒரு சிறய கிராமத்தில்தான் கடந்து சென்றது. சுற்றிலும் மலைகளால் சூழப்பட்ட ஒரு பள்ளத்தாக்கில் என் கிராமம் அமைந்திருந்தது. எங்கு திரும்பினாலும் ஏதாவது ஒரு மலை தென்படும். என் சிறுமைப் பருவ காலங்களில் மின் வசதியோ, போக்குவரத்து வாகனங்களோ அதிகமில்லை. என் ஊரில் ஒரு நடுநிலைப்பள்ளி ஒன்று இருந்தது. அப்பள்ளியில் பணியாற்றிய ஆசிரியத் தம்பதிகள் இருவர் வெளி ஊரிலிருந்து வந்து எங்கள் ஊரிலேயே தங்கி கல்விப்பணியும், இறைப்பணியும் செய்து வந்தார்கள்.

சிறுமைப் பருவத்தில் எங்கள் மீது மிகுந்த அன்பும், நேசமும் கொண்டு கல்விப்பணி செய்தார்கள். மாலை வந்து விட்டால் இருளில் மூழ்கிய அக்கிராமத்தின் தெருமுனைகளில் குறைந்த வெளிச்சத்தில் ஒளிரும் விளக்குத் தூண்கள் மட்டுமே இருந்தது.

குருவானவர்கள் மாதம் இருமுறை திருப்பலிக்கு வருவார்கள். மற்ற நாட்களில் மாலை இறைவழிபாடும், செபமும் உண்டு. எங்களையெல்லாம் கூட்டி வந்து ஆலயத்தில் இறைவழிபாடும், மறைக்கல்வியும் நடத்தியவர்கள் இந்த ஆசிரியத் தம்பதியர்களே, அவர்கள் இருவரின் நினைவு என் இதயத்தில் என்றும் பதிந்தே இருக்கிறது.

முதிர் வயதில் பணி ஓய்வு பெற்று அவர்களின் ஊர் சென்று விட்டார்கள். தள்ளாத வயது ஆசிரியருக்கு. சுயநினைவு இல்லாமல் போய்விட்டது. படுத்த படுக்கையானார். அவர்களின் பிள்ளைகளும் அவரைப் பார்க்க வந்தாலும் அவருக்கு அவர்களை யாரென்றே தெரியாமல் போய்விட்டது. தன் சாதாரண கடமைகளைக் கூடச் செய்யும் எவ்வித நினைவாற்றலும் இல்லை அவருக்கு.

அவரைப் பார்ப்பதற்காக ஒரு நாள் அவர்கள் வீடு சென்றேன். முதிர் வயதிலிருந்து என் ஆசிரியையோடு பேசிக்கொண்டிருந்தேன். அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டார்கள் "சாருக்கு எல்லாம் மறந்துபோய்விட்டது. என்னைக் கூட அவருக்கு ஞாபகமில்லை. ஆனால் ஒன்று மட்டும் அதிசயமாய்ச் செய்கிறார். மாலை நேரத்தில் ஒவ்வொரு நாளும் திருப்பலிக்கு இங்கு ஆலய மணி அடிக்கும். பக்திப் பாடல்கள் ஆலயத்தில் ஒலிபரப்பப்படும். உடனே இவர் கட்டிலை விட்டு எழுந்துவிடுவார். குளியலறை சென்று குளித்து தன்னை சுத்தப்படுத்திக் கொள்வார். ஆணியில் புதிய உடைகளைத் தொங்கவிட்டிருப்பேன். அவைகளை அணிந்துகொண்டு ஆலயத் திருப்பலிக்கு தடியை ஊன்றிக்கொண்டே அவராகவே சென்றுவிடுவார். ஆலயத்தில் அவருக்காகவே போடப்பட்ட நாற்காலியில் அமர்ந்து கொண்டு திருப்பலியில் கலந்து கொள்வார். திவ்விய நற்கருணை பெற்று திருப்பலி முடிவில் வீடு திரும்புவார். வந்து உடைகளைக் கழற்றிவிட்டு பழைய உடைகளைத் திரும்ப அவராகவே அணிந்துகொண்டு படுக்கையில் படுத்துவிடுவார். அவரின் இந்தச் செயல்தான் எனக்கு மிகுந்த ஆறுதலைத் தருகிறது" என்றார்.

யோவான் 14:10 - 11ல் ஆண்டவர் இயேசு பரம தந்தையுடன் எப்பொழுதும் இருக்கும் உடனிருப்பை இவ்வாறு கூறுகின்றார்... "என்னைக் காண்பது தந்தையைக் காண்பதாகும். நான் தந்தையுள் இருக்கிறேன். தந்தை என்னுள் இருக்கிறார். நான் சொல்வதை நம்புங்கள்" மத் 6:25-31 வரை உள்ள இறைவார்த்தைகளை வாசிக்கும்பொழுது இயேசுவின் இதயம் முழுவதும் பரம தந்தையின் பிரசன்னத்தினால் நிரம்பி இருக்கிறது. இந்த இறைப்பிரசன்னமே பார்க்கும் எல்லாவற்றையும் இறைமயமாய் காணும் உள்ளத்தைத் தருகிறது. வானத்துப் பறவைகளும், காட்டு மலர்களும் வயல்களில் வளரும் பசும்புற்களும் இறைவனின் வெளிப்பாடாகவே இயேசு காண்கின்றார். இறைப்பிரசன்னமே மற்றவர்களின் கண்ணுக்கு வெளிப்படாத அறிவையும், ஞானத்தையும் தருகிறது. இறைஇயேசுவின் அருள் மொழிகளுக்கும், ஞானம் நிறை வார்த்தைகளுக்கும் இதயம் நிறை இறைப்பிரசன்னமே காரணம். இறை உணர்வில் நிரம்பிய இதயத்திற்கு எல்லாவற்றிலும் இறைச்சாயலே தென்படும்.

புனித பவுலின் திருமடல்களில் உள்ள அறிவுப் பொக்கிஷங்களுக்கு அடிப்படை அவர் கூறிய "என்னையும், கிறிஸ்துவையும் யார் பிரிக்க முடியும்?" (உரோ 8:35) என்பதுதான். மேலும் "வாழ்வது நானல்ல, என்னில் இயேசுவே வாழ்கிறார்" (கலா 2:20) என்பதும்தான்.

சமீபத்தில் அபிலேஷ் டோமி என்ற கடற்படையில் பணியாற்றும் இளம் வயதுடையவர் 151 நாட்கள் கடலில் தனியாக பாய்மரக் கப்பலில் 23100 மைல்கள் பயணித்திருக்கிறார். கடலில் ஏற்பட்ட கடும் புயலால் உயர்ந்த அலை கொந்தளிப்புகள், எதிர்கொள்ளும் திமிங்கலங்கள் இவைகள் மத்தியில் பயணித்து வெற்றிகரமாகவே தன் அனுபவப் பயணத்தை முடித்திருக்கிறார்.

தன் பயண அனுபவங்களை இவ்வாறு பகிர்ந்து கொண்டார் "நான் கடலை நேசித்தேன். எனவே, அதனின் எதிர்ப்புகள் என்னைப் பயமுறுத்தவில்லை. எதிர்ப்புகளை சமாளிக்க நான் தயாராகவும், அனுபவப் பயிற்சியும் பெற்றிருந்ததால் கடினத்தை உணரவில்லை" என்றார்.

மேலும் அவர் கூறியது; "இறைப்பற்று இருந்ததால் இறைவனுடன் பயணித்த இனிமை அனுபவத்தைப் பெற்றேன். எனவே, தனிமைப் பயமில்லை. ஒவ்வொரு நாளும் காலையில் தியானம் செய்ததால் தனிமை என்னை வாட்டவில்லை. எங்கும் இறைமயமே தென்பட்டது. கடலில் மெல்லிய அமைதியில் என் ஆன்மாவின் ஆழத்தை உணர்ந்தேன். இறைவனின் தொடர்தலை பயணம் முழுவதும் உணர்ந்தேன். கடலே எனக்குத் தியானத்தின் மையமாய் இருந்தது" என்றார். இளையோரே இறைப் பிரசன்னத்தை உணர்வோம் அதை இதயத்தில் நிறைப்போம். புதிய உலகம் காண்போம்.

## சிறப்பாக இடம்பெற்ற முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் பொன் விழா நிகழ்வுகள்

**– தமிழ் நேசன் அடிகளார் –**

மன்னார் மாவட்டத்தில் கடந்த ஐம்பது ஆண்டுகளாக கலைப்பணியாற்றிவரும் முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் பொன்விழா நிகழ்வுகள் புரட்டாதி 20ஆம் திகதி முருங்கன் புனித இயாகப்பர் ஆலய வளாகத்தில் சிறப்பாக இடம்பெற்றது. கலைஞர் செபமாலை குழந்தை அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு வளர்க்கப்பட்டுவந்த இக்கலாமன்றத்தின் பொன்விழா நிகழ்வுகளை அருட்தந்தை செ. அன்புராசா மற்றும் முத்தமிழ் கலாமன்ற உறுப்பினர்கள் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தனர். இவ்விழாவிற்கு அருட்தந்தை தமிழ் நேசன் அடிகளார் தலைமை தாங்கினார்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் இவ்விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக முருங்கன் பங்குத்தந்தை அருட்பணி. பீற்றர் மனோகர், முருங்கன் மெதடிஸ்த குருவானவர் எஸ். ஆர். முருகுப்பிள்ளை, வவுனியாவைச் சேர்ந்த தமிழறிஞர் கலாநிதி அகளங்கன், யாழ் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளரும் கலைஞருமான கலாநிதி த. கலாமணி, யாழ் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளரும் கலைஞரும் ஆய்வாளருமான கலாநிதி க. சிறிகணேசன், அறிஞரும் கவிஞருமான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. சோ. பத்மநாதன் (சோ.ப.), மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் ஜனாப் எம். எம். சியான் ஆகியோர் கலந்துகொண்டனர். கௌரவ



விருந்தினர்களாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் கௌரவ என். சிவசக்தி ஆனந்தன், கௌரவ எஸ். வினோ நோகராதலிங்கம், நானாட்டான் பிரதேசசபைத் தலைவர் திரு. ஏ. ரீ. அன்புராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர். பல பிரமுகர்கள், கலைஞர்கள், கல்வியாளர்கள், குருக்கள், துறவியர் எனப் பலர் இவ்விழாவில் கலந்துசிறப்பித்தனர்.

இப்பொன்விழா நிகழ்வின்போது வடமாகாண ஆளுனர் செயலகத்தினால் நடாத்தப்பட்ட பாரம்பரியக் கலைகளுக்கான போட்டியில்....

தொடர்ச்சி 15ஆம் பக்கம்....

## அருட்தந்தையின் 25வது ஆண்டு நிறைவும், அருட்கொடைப்பணியின் சிறப்புமலர் வெளியீடும்



கடந்த 19.10.2014 திகதி தனது குருத்துவத்தின் 25வது வெள்ளிவிழா திருப்பலியை அருட்தந்தை ஜோர்ச் திசாநாயக்க அவர்கள் திருகோணமலை தூய மரியாள் பேராலயத்தில் சிறப்பித்தார். அதே வேளை இவ்வருடம் தங்கள் "அருட்கொடைபணிக்குழு"வின் 30வது "முத்து" விழாவினையும் சிறப்பித்தனர். இவ்விழாவின் சிறப்பம்சமாக நூல் வெளியீடும் இடம் பெற்றது. முதல் பிரதியினையும் ஞாபகசின்னத்தினையும் வெள்ளிவிழா நாயகன் அருட்தந்தை ஜோர்ச் திசாநாயக்க அவர்களுக்கு "அருட்கொடைபணிக்குழு"வின் தலைவி திருமதி. ஆஞ்சலின் சுப்ரமணியம் வழங்கி கௌரவித்தார்.

**தகவல் : F.S.ஆஞ்சலின்.**




# விசுவாசத்தின் ஒளி

## திருத்தூது மடல் பகுதி 02

**"நீ நம்பிக்கை கொள்ளவில்லை எனில் உன்னால் புரிந்து கொள்ள முடியாது"**

(எசா 7:9)

### விசுவாசமும் இறையியலும்

36. விசுவாசமே ஒரு ஒளியாக இருப்பதால், அது தனக்குள்ளேயே நம்மை ஈர்ப்பதோடு, அது ஒளிர்கின்ற மேற்பரப்பினை ஆராய நம்மை அழைப்பதோடு, நாம் காட்டும் அன்பின் குறிக்கோள் இன்னதெனவும் அறியவைக்கிறது. கிறிஸ்தவ இறையியலானது இந்த ஆர்வத்தாலேயே தோன்றியது. விசுவாசம் இன்றி இறையியல் அமையாது என்பது தெளிவு. அது கிறிஸ்துவிற்குள் கடவுள் வெளிப்படுத்தியுள்ள அவரது உயர்மதிப்புதனை ஆழ்ந்து புரிந்துகொள்ளும் ஒரு தேடல் முயற்சியாகும். அது அறிவியல் ஆய்வுகளைப் போன்று, ஒன்றைப் பரித்தறிந்து ஒன்றைப் புரிந்து கொள்ளத் தூண்டும் ஒரு மனித முயற்சிக்கும் மேலான ஒரு தவமுயற்சி. கடவுளை ஒரு பொருளாக வடிவமைத்துச் சுருக்க நம்மால் முடியாது. அவரே அவரை அறிவிப்பதினாலும், ஒருவருக்கொருவர் கொள்ளும் உறவு முயற்சிகளில் அவரைப் புரிந்து கொள்ளச் செய்வதாலும், அவரே ஒரு மூலகாரணப் பொருள் ஆகிறார். உண்மையான விசுவாசமென்பது தன்னைத் தானே மூலகாரணத்தோடு திறந்து கொண்டு கடவுளிடமிருந்து வரும் ஒளியை அனுபவிப்பது. அந்தக் காரணமே, மெய்மையிடம் உள்ள அன்பைப் புரிந்து கொண்டு அதன் துணையோடு, கடவுளிடமுள்ள ஆழ்ந்ததொரு அறிவிடம் வந்து சேர்வதாகும். இடைக்காலத்தைச் சேர்ந்த மாபெரும் இறையியலாளர்களும், மறை ஆசிரியர்களும், இறையியல் என்பது, ஒரு விசுவாசம் பற்றிய அறிவியல் என்றும், அது கடவுளது சொந்த அறிவில் தானே பங்கேற்கும் ஒரு முயற்சி என்றும் சரியாகவே முடிவு கூறியுள்ளனர். இது கடவுளைப் பற்றி நாமறிந்த வெறும் சொற்பொழிவு அல்ல, ஆனால், கடவுள் தன்னைக் குறித்துப் பேசிய வார்த்தைகளைப் புரிந்து எல்லாவற்றுக்கும் முதன்மையான ஒன்றாக அதனை ஏற்கவும், ஒரு ஆழ்ந்த புரிந்துணர்வைத் தொடர்ந்து நாம் மேற்கொள்ளவும் தக்கதொரு முயற்சியாகும். ஏனெனில், அவரே நற்கருணையின் வாயிலாக வந்து வாழ்வு தரும் வார்த்தைகள் அல்லாமல், நம்மை அவ்வார்த்தைகளின் வழியே ஒன்று இணையவும் அனுமதிப்பவர். அவரைக் கண்டு பிடிப்பது கடினம் என்ற போதும், மூலகாரணத்தை முறையாக அறியும் முயற்சிகளில் இறங்கி அவரது அளவு கடந்த பேருண்மைகளில் நிலைத்து நின்றாலும், அப்பேருண்மைகளின் முன்னர் தன்னைத் தானே தாழ்ந்து பணியுமாறு நம்மை எதிர்பார்க்கிறது.

விசுவாசத்தின் துறவறத் தன்மையைக் குறித்து இறையியலும் கூட அலசுகிறது. விசுவாசத்தின் ஒளி என்பது நம்பி வரும் காரணப் பொருளாகக் கூறப்பட்டுவரும் "திருச்சபை"யின் ஒளி ஆகும். ஒரு புறம் பார்த்தால் இதற்கு, கிறிஸ்தவர்கள் காட்டும் நம்பிக்கைக்கு இறையியல்தான் தொண்டாற்ற வேண்டும் என்று பொருளாகிறது. அதோடு, அவர்களைப் பாதுகாக்கவும், ஒவ்வொருவரிடமுள்ள நம்பிக்கையைக் குறிப்பாக சாதாரணமானவர்களுக்கு ஆழப்படுத்தவும் வேண்டும் என்பது தெளிவாகிறது. மறுபுறம், இறையியல் தனது வாழ்வை விசுவாசத்திடமிருந்து பெறுகிறது என்பதால், அது திருத்தந்தை (ம) ஆயர்களின் தலைமையைப் பற்றிக் கவலை கொள்வதில்லை, ஏனெனில் அவர்கள் ஏதோ வெளிப்புறம் இருந்து கொண்டு, அதன் சுதந்திரத்தில் வரம்பு கொண்டவர்கள் என்றும் கருதுகிறது. ஆனால் தனக்கு ஏற்படுத்தப்பட்ட எல்லைக்கு உட்புறத்தில் ஒன்றாக அது இருந்தபோதிலும், மூல காரணத்துடன் தொடர்பு கொண்ட மக்களாகவே நம்மைக் கருதி, அவ்வாறாக, தனக்குரிய நேர்மையோடு, கிறிஸ்துவின் வார்த்தைகளை ஏற்று நிறைவேற்ற உறுதி கொண்டுள்ளது.

தொடரும்...

## முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களின் பெயரால் உர்பானியா பல்கலைக் கழகத்தின் ஓர் அரங்கம்.



உர்பானியா பல்கலைக்கழகம் எந்த ஒரு நாட்டுக்கும், கலாச்சாரத்திற்கும் சொந்தமானதல்ல, மாறாக, உலகெங்கிலுமிருந்து கிறிஸ்துவைப் பற்றி அறிய விழையும் அனைத்து மாணவருக்கும் சொந்தமான ஓர் கல்விக் கூடம் என்று முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள் கூறினார். ஐப்பசி 21ந் திகதி உர்பானியா பல்கலைக்கழகத்தின் ஓர் அரங்கம் முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களின் பெயருக்கு அர்ப்பணமாக்கப்பட்டது. அதையொட்டி முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள் தனது வாழ்த்து செய்தியை அனுப்பியிருந்தார். அதில் பன்முகக் கலாச்சாரங்களிலிருந்து வந்து பயிலும் மாணவர்கள், உண்மையின் அடிப்படையில், அமைதியை வளர்க்கும் உரையாடலில் ஈடுபடவேண்டும்.

நற்செய்தி அறிவிப்புப்பணி பேராயத்தின் தலைவரான கர்தினால் Fernanado Filoni அவர்கள், இவ்விழாவில் தலைமை உரையாற்றியபோது, அறிவு சார்ந்த ஆன்மீகத்தின் தலைசிறந்த அறிஞராகத் திகழ்ந்த முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள் திருஅவைக்கு ஆற்றியுள்ள பணிகளுக்கு நன்றி கூறும் வகையில் அமைந்துள்ள இந்த அரங்க அர்ப்பணம் தனக்கு மகிழ்வளிப்பதாக தெரிவித்தார்.




## ஆறு வயது இந்தியச் சிறுவன் உலக சாதனை



நேபாளத்திலுள்ள 5, 554 மீட்டர் உயரமான கல்பதரு மலைச்சிகரத்தில் ஏறி உலக சாதனை படைத்துள்ளான் ஆறு வயது இந்தியச் சிறுவன் ஒருவன். ஹர்ஷித் சவுமித்ரா என்ற 6வயது சிறுவன், ஐப்பசி மாதம் 7ந் திகதி எவரெஸ்ட் மலை முகாம் வரை ஹெலிகப்டரில் சென்று, பின்னர் அங்கிருந்து 10 நாட்களில் கல்பதரு சிகரத்தில் ஏறி சாதனை புரிந்துள்ளான். இதற்கு முன்னர் பாலாஜி என்ற 7 வயது இந்தியச் சிறுவன் கல்பதரு சிகரத்தில் ஏறியதுதான் சாதனையாக இருந்தது. அதனை ஹர்ஷித் முறியடித்துள்ளான்.

மலை ஏறும் வீரரான ராஜீவ் சவுமித்ரா என்பவரின் மகனான ஹர்ஷித் சவுமித்ரா இந்தச் சாதனையைப் புரிந்துள்ளான். இதில் ஏறுவதற்காக அவன் தனது தந்தை மற்றும் 2 வழிகாட்டிகளுடன் சென்றான். இந்தச் சாதனை லிம்கா சாதனைப் புத்தகத்தில் இடம்பெறுகிறது. கின்னஸ் சாதனைக்காகவும் இந்த ஆதாரங்களை அனுப்ப உள்ளதாக அவனது தந்தை தெரிவித்துள்ளார்.



## "ஆறாம் பவுல் அவர்களுக்கு வணக்கம்" என்ற தலைப்பில் வத்திக்கானில் தொடங்கும் கண்காட்சி

ஐப்பசி 19ந் திகதி திருத்தந்தை 6ம் பவுல் அவர்கள் முத்திப்பேறு பெற்றவராக உயர்த்தப்பட்ட நிகழ்வையொட்டி ஐப்பசி 18ந் திகதி முதல் ஐப்பசி 25ந் திகதி வரை "ஆறாம் பவுல் அவர்களுக்கு வணக்கம்" என்ற தலைப்பில் கண்காட்சியொன்று வத்திக்கானில் உள்ள திருத்தந்தை 6ம் பவுல் அவர்களின் பன்னாட்டு நூலகத்தில் மக்களின் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கண்காட்சியில் திருத்தந்தை 6ம் பவுல் அவர்களின் உருவம் பதித்த தபால் வில்லைகள், நாணயங்கள், 1963ம் ஆண்டு முதல் 1978ம் ஆண்டு வரை திருச்சபையின் தலைவராக பணியாற்றிய திருத்தந்தையை மையப்படுத்திய சில நூல்களும், அரிய புகைப்படங்களும் இடம்பெற்றன.

# திரு அவையின் அதிகாரப்பூர்வ அங்கீகாரம்




SIGNIS என்ற உலக கத்தோலிக்க ஊடக அமைப்பு திரு அவையின் அனைத்துலக கத்தோலிக்க ஊடக நிறுவனம் என்ற அதிகாரப்பூர்வ அங்கீகாரத்தை 24.10.2014 அன்று உரோமையில் இடம்பெற்ற சிறிய திருவழிபாட்டு நிகழ்வில் திருப்பீட பொதுநிலையினர் அவையின் தலைவர் கர்தினால் ஸ்தனிஸ்ராஸ் றில்கோ அறிவித்தார்.

இந்த அங்கீகாரம் SIGNIS அமைப்பின் கத்தோலிக்க தனித்துவத்தை உறுதிசெய்வதோடு, உண்மை, நீதி, ஒவ்வொரு மனிதரின் மாண்பு ஆகிய உன்னதக் குறிக்கோள்களை ஊக்கப்படுத்துவதற்கு இவ்வமைப்புக்கு இருக்கும் கடமையை இது உணர்த்துகிறது. பெல்ஜியத்தின் Brussels நகரை மையமாகக் கொண்டு இயங்கும் SIGNIS உலக அமைப்பு இந்தியா, இலங்கை உட்பட 140 நாடுகளில் இயங்கி வருகின்றது.

## மணவாழ்வில் பொன்விழா



கத்தோலிக்க பாரம்பரியம் நிறைந்த கரம்பொன் ஊரில் பிறந்த வாழ்ந்த திரு. எஸ். எம். யோசவ், திருமதி. மேரி வில்பேட் அவர்கள் தமது திருமண வாழ்வின் ஐம்பது ஆண்டு பொன்விழாவைக் 30.10.2014 கொண்டாடி மகிழ்ந்தனர். இறைவன் இவர்களிற்கு அளித்த சகல நன்மைக்கும் அருள் வாழ்விற்கும் நன்றி கூறி இவர்கள் இருவரும் இன்னும் பல்லாண்டுகள் நலமே வாழ என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்து நிற்கின்றேன்.

**எஸ்.பி டேவிற், கொழும்பு – 6**

### ஸ்மார்ட்டாக இருக்க வேண்டுமென்று பெரியவர்கள் கூறுவார்கள். 'ஸ்மார்ட்' என்றால் என்ன?

| | |
|---|---|
| S - *Specific* | - திட்டவட்டமானதாக |
| M - *Measurabie* | - அளவிடக்கூடியதாக |
| A - *Achivable* | - சாதிக்கக்கூடியதாக |
| R - *Realistic* | - எதார்த்தமானதாக |
| T - *Time Bound* | - கால வரையறைக்கு உட்பட்டதாக |

1ம் பக்கம்

**திருத்தந்தை 6ம் பவுல்...**

1963ம் ஆண்டு முதல் 1978ம் ஆண்டு வரை 15 ஆண்டுகள் திருச்சபையை இவ்வுலகில் வழிநடத்திய திருத்தந்தை 6ம் பவுல் அவர்கள் Giovanni Battista Montini என்ற இயற்பெயரைக் கொண்டவர். 1954 மிலான் உயர்மறைமாவட்ட பேராயராக நியமிக்கப்பட்டார். 1978ம் ஆண்டு ஆவணி மாதம் 6ந் திகதி காஸ்தெல் கந்தோல்.'.போவில் காலமானார். வட இத்தாலியின் பிரேஷா மாவட்டத்தில் 1897ம் ஆண்டில் பிறந்த திருத்தந்தை 6ம் பவுல் அவர்கள் 1920ல் குருவானார். 1963ம் ஆண்டில் புனித திருத்தந்தை 23ம் யோவான் அவர்கள் இறந்த பின்னர் பாப்பிறையான திருத்தந்தை 6ம் பவுல் அவர்கள் 2ம் வத்திக்கான் பொதுச்சங்கத்தை மீண்டும் கூட்டி அதனை நிறைவு செய்தார். இந்தியாவுக்குத் திருப்பயணம் மேற்கொண்ட முதல் திருத்தந்தையாவார். இந்தியாவுக்குச் செல்லும் வழியில் இலங்கை கட்டுநாயக்க விமான நிலையத்தில் இறங்கி திருப்பலி நிறைவேற்றிச் சென்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1ம் பக்கம்

**முத்திரை வெளியீடு.**

வகையில் முத்திரைப் பணியகத்தின் வடிவமைப்பில் ஞாபகார்த்த முத்திரையொன்று வெளியிடப்படவுள்ளது. பத்து ரூபா முகப்புப்பெறுமதியைக் கொண்ட இந்த முத்திரையில் திருத்தந்தையின் படம் மற்றும் அவருடைய இலங்கை விஜயத்திற்கான திகதி என்பன உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும் "பாப்பரசரின் இலங்கை விஜயம்" என்று இம்முத்திரைக்கு பெயரும் சூட்டப்பட்டுள்ளது.

6ம் பக்கம்

**இறந்த ஆன்மாக்களின்...**

10. இறந்த ஆன்மாவிற்கு திருப்பலி ஒப்புக்கொடுத்த பின்பு அவர்களின் பெயரில் ஏழை எளியோருக்கு தானம் கொடுப்பது நலமாகும்.

11. சில பெரிய பங்குகளில் கார்த்திகை மாதம் 2ம் திகதிக்கு பின்பு, ஒரு தினத்திலும் ஆன்மாக்களுக்காக (பெயர்களை வாசிக்கலாம்) திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மறுதினம் அவர்களின் பெயரால் தானம் வழங்கப்படுகின்றது. இதுவும் ஒரு நல்லதொரு விடயமாகும்.

## காக்க காக்க உடல் நலம் காக்க

**இதயம் காக்க :**

சின்ன துண்டு இஞ்சியை அரைத்து ஒரு தம்ளர் வெந்நீரில் கலக்கி அரை மணி நேரம் கழித்து தண்ணீரை வடிகட்டுங்கள். அதில் அரை ஸ்பூன் எலுமிச்சம் சாறு, ஒரு ஸ்பூன் தேன் கலந்து தினந்தோறும் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடுங்கள். இதயக்கோளாறு வரவே வராது.

**கண்ணைக் காக்க:**

கண்களை ஒரு நாளைக்கு இருவேளை சுத்தம் செய்ய வேண்டும். கண்ணாடி அணியாமல் பைக்கில் செல்வோர் வீட்டுக்குள் வந்ததும் கண்ணை கழுவவேண்டும். கண்ணை திறந்து பல முறை தண்ணீரை அடித்து கழுவினால் தூசி நீங்கிவிடும். கண் ஒளி அதிகரிக்க பப்பாளிப்பழம் சாப்பிடவேண்டும்.

**வயிற்றைக் காக்க:**

சிலருக்கு பசியே வராது. அதற்காக சாப்பிடாமலேயே இருந்தால், அது பல நோய்களை ஏற்படுத்திவிடும். அதனால் நிலவேம்பு, கிராம்பு, வேப்பம் பட்டை ஆகியவற்றுள் ஏதாவது ஒன்றை கஷாயமாக போட்டு குடித்து வந்தால் பசி தானாக வரும்

**குரல்வளம் காக்க :**

குரல் இனிமையாக சுக்கு, வால்மிளகு, திப்பிலி ஆகியவற்றை வறுத்து பொடியாக்குங்கள். தினமும் ஒரு ஸ்பூன் எடுத்து தேனில் கலந்து குழைத்து சாப்பிடவேண்டும்.

**உடல் வளம் காக்க :**

உடலை எப்போதும் குளிர்ச்சியாக வைத்திருக்க வேண்டும். அதற்கு வாரந்தோறும் நல்லெண்ணெய் தேய்த்து குளியுங்கள். வெந்தயக் கஞ்சி, உளுத்தம் சோறு சாப்பிடுங்கள். நரம்புகள் பலமாக வெங்காயத்தை நன்றாக வதக்கி காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடுங்கள். உடம்பில் சதை வைக்க தினமும் பொன்னாங்கண்ணி கீரையை பருப்பு போட்டு சமைத்து சாப்பிடுங்கள்.

13ம் பக்கம்

**சிறப்பாக இடம்பெற்ற...**

மாகாண மட்டத்தில் பங்குகொண்ட, முதலிடங்களைப் பெற்ற இம்மன்றத்தின் கலைநிகழ்வுகள் மேடையேற்றப்பட்டமை சிறப்பம்சமாக அமைந்திருந்தது. மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்ற சிறுவருக்கான கூத்துவழி நடனம், முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் குழந்தைக் கலைஞர்கள் நடித்த "யார் குழந்தை" என்ற கூத்து நாடகம், "வீரத்தாய்" நாடகம், ஆவணம் கார்மேல் அன்னை கலாமன்றத்தின் வடமாகாணப் போட்டியில் முதலிடம் பெற்ற "பாஞ்சாலி சபதம்" கூத்து நாடகம் போன்றவை இவ்விழாவில் அரங்கேற்றப்பட்டு பலரது பாராட்டைப் பெற்றிருந்தன.

கடந்த ஐம்பது வருடங்களாக மன்றத்தில் கலைப்பணியாற்றிய மூத்த கலைஞர்களுக்கு பொன்னாடை போர்த்தி, பொற்கிளி வழங்கப்பட்டது. இறந்தபோன கலைஞர்களின் மனைவிமார் மேடைக்கு அழைக்கப்பட்டு பொன்னாடை போர்த்தப்பட்டனர். கலாமன்றத்தில் நீண்டகாலமாகப் பணிபுரிந்த, பணிபுரிந்து வருகின்ற இளங்கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர். இதைவிட மன்னார் மாவட்டத்தின் பல்வேறு இடங்களைச் சேர்ந்த சமூகப்பெரியார்கள், கலைஞர்கள், இலக்கியவாதிகள் ஆகியோர் கௌரவப் பட்டங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். ஆத்திக்குளியைச் சேர்ந்த ஆளுனர் விருது பெற்ற திரு. அ. அந்தோனிப்பிள்ளை அவர்கள் சிறுவர் இலக்கியத்திற்கு செய்த பணிகளைப் பாராட்டி "பிள்ளைத் தமிழோன்" என்ற கௌரவ பட்டம் வழங்கப்பட்டது. பேசாலையைச் சேர்ந்த திரு. எஸ். ஏ. உதயன் அவர்களின் நாவல் இலக்கியப் படைப்புக்களைப் பாராட்டி "நாவல் நாயகன்" என்ற கௌரவ பட்டம் வழங்கப்பட்டது. ஆட்காட்டிவெளியைச் சேர்ந்த திரு. பி. எம். செபமாலை அவகர்ள் மாதோட்ட வரலாற்றியலுக்கு செய்த பங்களிப்பைப் பாராட்டி "ஆய்வறிந் தலைமகன்" என்ற கௌரவ பட்டம் வழங்கப்பட்டது. இசைமாலைத்தாழ்வைச் சேர்ந்த திரு. செபமாலை பிலிப்பு (சிங்கராசா) அவர்களின் கலைச்செயற்பாடுகளைப் பாராட்டி "சுடர்கலைச் சோதி" என்ற கௌரவ பட்டம் வழங்கப்பட்டது. காத்தான்குளத்தைச் சேர்ந்த திருமதி. வசந்தி சுவாந்தகுரூஸ் அவர்களின் நாடகத்துறைப் பங்களிப்பைப் பாராட்டி "அரங்கச் செல்வி" என்ற கௌரவ பட்டம் வழங்கப்பட்டது.

இதைவிட இவ்வாண்டு குருத்துவ வெள்ளிவிழாக் கண்ட அருட்பணியாளர்கள் தேவராஜா கொடுதோர், பீற்றர் மனோகர் மற்றும் கலாநிதி அகளங்கன், கவிஞர் சோ. பத்மநாதன், கலாநிதி த. கலாமணி, கலாநிதி சிறிகணேசன், கலாபூசணம் விருது பெற்ற மன்னார் மணி (திரு. மரியதாஸ்), யாழ் குருநகர் இராயப்பு கலையார்வன் ஆகியோரும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

குறித்த நேரத்திற்கு நிகழ்வுகள் ஆரம்பமாகி குறிப்பிட்ட நேரத்திற்குள் நிகழ்வுகள் யாவும் நிறைவுபெற்றமையும், நிகழ்வுகள் யாவும் விறுவிறுப்பாக அமைந்திருந்தமையும், பார்வையாளர்கள் பெருமளவில் கலந்து கொண்டமையும் இவ்விழாவின் சிறப்புக்களாக சிலாகித்துப் பேசப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

11ம் பக்கம்

**கத்தோலிக்க திருமறை...**

18. சீலன் முழுநாளும் கஷ்டப்பட்டு தயாளனின் தோட்டத்தில் வேலை செய்தபோதும், முதலில் பொருந்திய ஊதியம் அவனுக்குக் கிடைக்கவில்லை. இச்செயலில் தயாளன்,

i. 7ம் கட்டளைக்கு எதிராகச் செயற்பட்டுள்ளான்.
ii. 4ம் கட்டளைக்கு எதிராகச் செயற்பட்டுள்ளான்.
iii. 2ம் கட்டளைக்கு எதிராகச் செயற்பட்டுள்ளான்.
iv. 1ம் கட்டளைக்கு எதிராகச் செயற்பட்டுள்ளான்.

19. "உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்" இந்த இறைவார்த்தைகளை உமது வாழ்வில் செயற்படுத்தும் சந்தர்ப்பம்,

i. எப்பொழுதும் உண்மையை வெளிப்படுத்துவதன் மூலம்
ii. எப்பொழுதும் உண்மை உடையவராக வாழ்வதன் மூலம்
iii. எப்பொழுதும் பொய்மையை வெறுப்பதன் மூலம்
iv. எப்பொழுதும் உண்மைக்கு மதிப்பளிப்பதன் மூலம்

20. மாலினி தனது அன்றாட வாழ்வை மிகவும் கஷ்டத்துடன் நடாத்துகின்றாள். ஆயினும் அவள் மற்றவர்களின் முன்னேற்றத்தையே எப்போதும் விரும்பும் ஓர் பெண்மணியாகும். இவளுடைய இச்செயலுடன் தொடர்புடைய இறைக்கட்டளை

i. 5ம் கட்டளை ii. 7ம் கட்டளை
iii. 10ம் கட்டளை iv. 6ம் கட்டளை

## விண்ணக வாழ்வின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 22 06 1967

இறைவன் கரத்தில் 08 11 2012

**திரு. M. ஜோன் கிறிஸ்டோபர்**

மிகவும் இரக்கமுள்ள இயேசுவே உமது திருக்காயங்களின் பொருட்டு நாம் எம் தந்தைக்காக செய்யும் வேண்டுதல்களுக்கு செவிசாயும். அவர் உமது வாயிலிருந்து வரும் ஒரு வார்த்தைக்காக ஏங்கி நிற்கின்றார். இயேசுவே விசேடமாக இவ்வுலகில் உமது திரு இருதயத்திற்கு அன்பு செய்து வந்த அவ்வான்மாவுக்கு விரைந்து உதவியருளும். அவரும் அனைத்து புனிதருடனும் சேர்ந்து உம்மை புகழும் வரத்தை தாரும் இறைவா ஆமென்.

**இவரது பிரிவால் துயருறுவோர்**

**மனைவி, பிள்ளைகள், பெற்றோர், சகோதர சகோதரிகள்**

(N4247)

## அமுத மொழிகள்

"ஆண்டவராகிய கடவுள், இஸ்ரயேலரின் கடவுள் போற்றி போற்றி. அவர் ஒருவரே வியத்தகு செயல்களைப் புரிகின்றார்" (தி.பா 72:18)

"உமக்கு நன்றி செலுத்துகின்றோம் கடவுளே. உமக்கு நன்றி செலுத்துகின்றோம். உமது பெயரைப் போற்றுகின்றோம். உமது வியத்தகு செயல்களை எடுத்துரைக்கின்றோம்" (தி.பா 75:1)

"எங்கள் மீட்பராகிய கடவுளே உமது பெயரின் மாட்சியை முன்னிட்டு எங்களுக்கு உதவி செய்தருளும். உமது பெயரை முன்னிட்டு எங்களுக்கு உதவி செய்தருளும்" (தி.பா 79:9)

"ஆண்டவரே நீர் ஒளி மிக்கவர். உமது மாட்சி என்றுமுள மலைகளிலும் உயர்ந்தது" (தி.பா 76:4)

## நத்தார் சிறப்பிதழை உங்கள் ஆக்கங்களால் அலங்கரியுங்கள்

எமது பத்திரிகையின் "நத்தார் மற்றும் புதுவருட சிறப்பிதழ்களை" உங்கள் ஆக்கங்களான கட்டுரை, சிறுகதைகள் கவிதைகள், சித்திரங்கள் மற்றும் நத்தார் பற்றிய சிறப்புத் தகவல்கள் ஆகியவற்றினால் அலங்கரிக்க இதோ உங்களுக்கோர் சந்தர்ப்பம்! உங்கள் கலைத் திறமைகளையும், தகவல்களையும் எமக்கு 25.11.2014க்கு முன்னதாக அனுப்பிவையுங்கள். சிறந்த ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு நத்தார் சிறப்பிதழில் வெளியிடப்படும்



**அனுப்ப வேண்டிய முகவரி**

**ஆசிரியர், ஞான ஒளி**

**"நத்தார் சிறப்பிதழ்"**

**இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை**

**பொரளை, கொழும்பு – 08**

**எமது மின்னஞ்சல் முகவரி**

cgnanaoli@yahoo.com

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

- ❊ நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்)
- ❊ நவீன பிரதியாக்கம் (டுப்ளோ)
- ❊ வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தலும், ஸ்கேன் எடுத்தலும்,
- ❊ பலவர்ணங்களின் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்
- ❊ அடையாள அட்டைகள் தொடக்கம் A-3 அளவிலான லெமினேட்டிங் சேவைகள்




## உங்களுக்கான பல விசேட சேவைகள்!

| | பின் பக்கம் | உற்பக்கம் |
|---|---|---|
| ஆலயத் திருவிழா (திருத்தப்பட்டுள்ளது) ¼ பக்கம் ½ பக்கம் முழுப்பக்கம் | 7750/= 15500/= 31000/= | 7000/= 14000/= 28000/= |
| வர்த்தக விளம்பரம் (திருத்தப்பட்டுள்ளது) ¼ பக்கம் ½ பக்கம் முழுப்பக்கம் | 11500/= 23000/= 46000/= | 10000/= 20000= 40000/= |

வர்ணம் + 25 %

### கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

| | 1 ½" x 1" single | 3" x 1"Double | 5" x 1" Trible |
|---|---|---|---|
| 1" | 350/= | 700/= | 1050/= |
| 1½" | 525/= | 1050/= | 1575/= |
| 2" | 700/= | 1400/= | 2100/= |
| 2½" | 875/= | 1750/= | 2625/= |
| 3" | 1050/= | 2100/= | 3150/= |
| 3½" | 1225/= | 2450/= | 3675/= |
| 4" | 1400/= | 2800/= | 4200/= |
| 4½" | 1575/= | 3150/= | 4725/= |
| 5" | 1750/= | 3500/= | 5250/= |
| 5½" | 1925/= | 3850/= | 5775/= |
| 6" | 2100/= | 4200/= | 6300/= |

ஞான ஒளி பத்திரிகையின்
விளம்பரங்களுக்கான விலைப்பட்டியல்

| | பின் பக்கம் | உற்பக்கம் |
|---|---|---|
| ஆலயத் திருவிழா (திருத்தப்பட்டுள்ளது) ¼ பக்கம் ½ பக்கம் முழுப்பக்கம் | 7750/= 15500/= 31000/= | 7000/= 14000/= 28000/= |
| வர்த்தக விளம்பரம் (திருத்தப்பட்டுள்ளது) ¼ பக்கம் ½ பக்கம் முழுப்பக்கம் | 11500/= 23000/= 46000/= | 10000/= 20000= 40000/= |

வர்ணம் + 25 %

திருமண சேவைகளுக்கு
1 தொடக்கம் 15 சொற்கள் வரை
ரூபா 500.00உம் தொடர்ந்து வரும் ஒவ்வொரு
சொற்களுக்கும் ரூபா 8.00 வீதமும் அறவிடப்படும்.

### தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய
மாவத்தை கொழும்பு - 08.
தொ.பே இல. 0112695984, 0112678106,
0114614927 பெக்ஸ் - 0112692586
E-mail : colombocp@sltnet.lk
www.colombocatholicpress.com






அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை M.F. மகேந்திர D. குணதிலக்க,, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்